தப்லீக் அன்றும் இன்றும்: பாகம்-2

# தஃலீம் தொகுப்பு

## குர்ஆனுக்கு எதிரானதா ?

ஒட்டமாவடி அறபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ASSALAFIYA BOOK CENTER
KU / PARAGAHADENIYA,
WEUDA. T: P: 037 99423

## தப்லீக் அன்றும் இன்றும் பாகம் - 2

அகத்திமுறிப்பான்

# த:லீம் தொகுப்பு குர்ஆனுக்கு எதிரானதா?

ஓட்டமாவடி அறபாத்

வெளியீடு:

இஸ்லாமிய புத்தக நிலையம்
ஓட்டமாவடி எம்.பி. ஸி. எஸ் றோட்
மாவடிச் சேனை
வாழைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ASSALAFIYA BOOK CENTER
KU / PARAGAHADENIYA,
WEUDA. T:P: 037 39423

□ தப்லீக் அன்றும் இன்றும் பாகம் 11

□ த ்.லீம் தொகுப்பு குர்ஆனுக்கு எதிரானதா (விமர்சனம்)

□ ஓட்டமாவடி அறபாத் (ஸஹ்வி)

□ பதிப்புரிமை: ஆசிரியருக்கு

□ இரண்டாம் பதிப்பு : 1999 ஏப்ரல்

□ அட்டை வடிவமைப்பு: சினாஸ் முஹம்மட்

□ விலை:30/=

□ ISBN: 955-96317-2-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் சமாதானமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், உத்தமத் தோழர்கள், மற்றும் அவர்களைத் துயர்ந்தோர் அனைவர் மீதும் மறுமை பரியந்தம் உண்டாவதாக.!

என்னால் எழுதப்பட்ட **"தப்லீக் அன்றும் இன்றும்"** என்ற சிறு நூல் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தாரிடை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதுடன், சிந்தனைத் தெளிவையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிவேன். குறிப்பாக தப்லீக் ஜமாஅத்தினரை மிகுந்த சஞ்சலப்படுத்தி ஆத்திரமூட்டி விட்டது.

இவ்விமர்சன நூல் தொடர்பாக அவர்களிடமிருந்து மறுப்பேதும் வரலாமென எதிர்பார்த்திருந்தேன். நேரிடையாகவோ, பகிரங்கமாகவோ, இது பற்றி பேச வரலாம் என பகிரங்கப்படுத்தினேன். என்ன காரணத்தினாலோ, அவர்கள் முன்வரவில்லை.

'ஒரு முஃமினைப் பொருத்தவரை அவன் இருட்டில் வாழும் 'வௌவாலை'ப் போன்று இருக்கக் கூடாது, வெளிச்சத்தில் வாழும் இனிமையான பறவைகள் போன்று அவன் உள்ளும் புறமும் தூய்மையானதாகவும், பட்டவர்த்தனமாகவும் இருக்க வேண்டும். இதுதான் ஒரு உண்மையான முஸ்லிமின் அடிப்படைத் தகுதி. இவ்வுண்மையின் அடிப்படையில் கருத்துப்பரிமாறிக் கொள்ள அவர்கள் இணங்கியிருக்கலாம்.

தப்லீக் ஜமாஅத் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வதில்லை, என்பதுடன் விமர்சிப்பவனையும் அங்கீகரிப்பதில்லை என முதலாம் பாகத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுருந்தேன். மேற்படி நூல் வெளியாகி ஓரிரு தினங்களிலேயே தப்லீக் ஜமாஅத்தின் நெருக்குதல்களையும் அச்சுறுத்தல்களையும் மிகக் கடுமையாக எதிர் கொள்ள வேண்டியதாயிற்று.

தர்க்க ரீதியான விமர்சனங்களை சிலருக்கு சந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாமற் போனால், உட்குரோதம் கொண்ட காழ்ப்புனர்வில் அடிதடியில் இறங்குவது வழக்கம். இதை தர்க்கவியலாளர் Argumentum ad, Baculum என்பார்கள். இது தப்லீக் ஜமாத்தினரைப் பொருத்தவரையில் மிகப் பொருத்தமான கருத்தாகும்.

மூன்றாம் பதிப்பில் 'தப்லீக் அன்றும் இன்றும்' நூலை விரிவுபடுத்தி குற்றச்சாட்டுகளுக்கு பதில் எழுதினால் போதுமென்றே நினைத்திருந்தேன். எனினும் வாங்கிப்படிக்கும் வாசகர் நலன் கருதியும். தெளிவு பெற வேண்டிய அனேக விஷயங்கள் இன்னும் உள்ளதென்ற, வேண்டுகோளுக்கிணங்கவும் இரண்டாம் பாகமாக இந்நூலை எழுத விழைந்தேன்.

முதலாம் பாகத்தில் விடுபட்ட அம்சங்களுடன், குற்றச் சாட்டுக்களுக்கான பதிலையும் ஆதாரபூர்வமாக இதில் சேர்த்துள்ளேன். அதற்கு முன் தப்லீக் அன்றும் இன்றும் நூல் தொடர்பாக தப்லீக் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் என்னுடன் நடந்து கொண்ட விதம் பற்றி, வாசகர் அறிந்து கொள்ள வேண்டும்.

''நூலுக்கு எதிர்ப்பேதும் வரவில்லையா''? என்ற வாசகர் வினாவுக்கு நான் எழுதப்போகும் கசப்பான உண்மைகள் சாட்சியாக அமையும்.

ஓர் உண்மைமயை சொல்லப் போய் எவ்வாறு தப்லீக் ஜமாஅத்தினரால் உளவியல் உபாதைகளுக்கும், பயமுறுத்தல்களுக்கும் நான் ஆளானேன், என்பதை இங்கு எழுதாமல் விடுவது வாசகர் துரோகமெனக் கருதுகிறேன்.

நூலைப்படித்து விட்டு பிரபல ஈழத்து எழுத்தாளரும் இலக்கிய வாதியுமான ***எஸ். எல். எம். ஹனீபா*** நூல் தொடர்பான தனது அபிப்பிராயத்தை எனக்கு இவ்வாறு எழுதி உற்சாகமூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கள் எழுத்து காலத்தின் தேவை நூல் சிறிதாக இருந்தாலும் நமது சமூகத்திற்கு ஒரு மிதிவெடியின் அதிர்ச்சியை நிச்சயம் கொடுக்கும்.'' நூல் தொடர்பான எதிர்ப்புக் கிளம்பிய போது எனக்கு தவிர்க்க முடியாமல் அவரின் வாசகங்கள் நெஞ்சில் மோதின.

''தப்லீக் அன்றும் இன்றும்'' முதலாம் பாகத்தை கள்-எலிய பள்ளியில் பேஷ் இமாமாக கடமையாற்றிய காலத்தில் எழுதி வெளியிட்டேன். நூல் வெளியாகி ஓரிரு வாரங்களில் கடுமையான எதிர்ப்புக் கிளம்பி விட்டது.

1998 ஏப்ரல் 7ம் திகதி இரவு இஷாத் தொழுகையின் பின் இது தொடர்பான ஒரு உரையாடல், எனக்கும் பள்ளிவாயல் நிர்வாகிகளுக்குமிடையே ஏற்பாடாயிருந்தது. நிர்வாகத்தினரில் கணிசமானோர் நூல் தொடர்பாக எனக்குள்ள எழுத்துரிமை பற்றி நடுநிலையுடன் வாதாடின. அதே இரவு தப்லீக் ஜமாஅத்தின் கள்-எலிய அமீர் இப்புத்தகத்தை நான் எழுதியற்தாக

*''என்னை ஒரு ''முனாபிக்''* எனக் கூறினார். (பின்பு சபையோரின் வற்புறுத்தலால் அதை வாபஸ் வாங்கினார்) மட்டுமன்றி, அவருட்பட அவரின் சீடர்களும் என்னைப் பின்பற்றி ஜமாஅத்துடன் தொழுவதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தனர். அதை இறுதிவரை அமுல்படுத்தியும் வந்தானர்.

''ஒரு முஸ்லிமை ஏசுவது துர்ச்செயலாகும், அவனுடன் பிணங்கிக் கொள்வது ''குப்ர்''ஆகும் என நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் இப்னு மஸ்ஊத் (ரழி)*
*நூல்: புகாரி-முஸ்லிம்*

என்ற நபிமொழியை அமீர் நன்கு அறிந்திருப்பவர். ஒரு முஸ்லிமை முனாபிக்' என்றோ, காபிர் என்றோ கூறக்கூடாது என்ற இஸ்லாமிய அடிப்படை அரிவரி அறிவு கூட இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீர் அவர்கள், நூல் தொடர்பாக சில குற்றச்சாட்டுக்களையும் முன் வைத்தார்.

மேற்குறித்த எனது நூல் தொடர்பாக நான் நயவஞ்சகத்தனமாக (முனாபிக்) நடந்திருப்பின் எனக்கதை தக்க ஆதாரத்துடன் நிருபித்திருக்க வேண்டும்.

மிகத் தெளிவாக எனது பெயர் விலாசம் உள்ளிட்ட தகவல்களுடன் ஆதாரபூர்வமான கருத்துக்கள் அடங்கியதாக நூலை எழுதினேன். இதில் நயவஞ்சகத்தனமாக நான் நடந்து கொள்ளவில்லை. மிகப்பட்டவர்த்தனமாக எழுதப்பட்ட விடயங்களை ஒதிக்கிவிட்டு ஆசிரியரான அவர் அநாகரீகமாக ஏன் நடந்து கொண்டார் என சிந்திக்கையில், ஒரு விடயம் தெளிவாயிற்று. ''தப்லீக் வெறி''தவிர வேறொன்றுமில்லை.

ஒரு ''முனாபிக்''கின் அடையாளம் மூன்று.

*1. பேசினால் பொய் பேசுவான்.*

*2. வாக்குறுதியளித்தால் மாறு செய்வான்.*

*3. நம்பினால் மோசடி செய்வான்.*

அறிவிப்பவர்:அபூஹுரைறா(ரழி)

நூல்:புஹாரி.

மதிப்பிற்குறிய அமீர் ஷாகிபு குறிப்பிட்டது போல், மேற்கண்ட ஹதீஸின் அடிப்படையில் எனது நூலின் கருத்துக்கள் உள்ளனவா?

பொய்யான கதைகளோ, கப்ஸாக்களோ நூலில் இல்லை. தப்லீக்கின் தவறுகளை மூடிமறைத்து, அந்த இயக்கத்துடன் இணங்கிப்போவேன் என அவரிடம் வாக்குறுதி செய்யவுமில்லை.

ஆறு நம்பருக்குப்புறம்பாக நான் எழுதமாட்டேன் என அவர் நம்பியிருக்கலாம், அந்த நம்பிக்கைக்கு முரணாக நான் அவரின் இயக்கத்திற்கு மோசடி செய்து விட்டேன் எனக் கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முனாபிக்'எனக் கூறினாரோ?இதைத்தவிர என்னையும் நூலையும் எதிர்ப்பதற்கு அவரிடம் ஏதுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

29ஏப்ரல்98 இரவு, என் அறைக்கு வந்த அமீர், சில சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென என்னை அழைத்திருந்தார். என்னுடன் அல்-மஸ்ஜிதுல் சுபுஹானியின் கௌரவ செயலாளர் உட்பட, மற்றும் சில உலமாக்களும், நிர்வாக சபை அங்கத்தினர் சிலரும் பிரசன்னமாயிருந்தனர்.

சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் கலந்துரையாடல் என அழைத்துவிட்டு, நூல் தொடர்பாக விவாதிக்கத் தொடங்கினார்.

அதில் பிரதானமாக ''ஜமைராத்திரி'' யில் சகோதர இயக்கங்களுக்கெதிரான சதியாலோசனை பக்:26, அமீர்களின் எண்ணிக்கை:பக்:21, தொடர்பாக சந்தேகம் எழுப்பினார். அவரின் சந்தேகங்களுக்குறிய தக்க பதிலை சபையோர் முன் கூறினேன். எனினும் அவரால் அதை ஜீரணிக்க முடியவில்லை ஈற்றில்,மனித தர்மத்திற்கும்,மாநபியின் போதனைக்கும் ஒவ்வாத கீழ்தரமான சொற் பிரயோகங்களை கையாளவும் செய்தார்.

''நீ எங்களூரில் இருந்து எங்கள் வரிப்பணத்தில் சம்பளம் எடுத்துக் கொண்டு,எங்கள் சோற்றைத் தின்று கொண்டு எங்களுக்கெதிராக புத்தகம் எழுதுகிறாயா.''? இதை எழுதியவனுக்கு அல்லாஹ் என்ன தண்டனை கொடுப்பானோ? என சாபம் வேறு கொடுக்கவும் செய்தார். தவிர, தப்லீக் அன்றும் இன்றும் நூலை உயர்த்திக் காண்பித்து ''ஊர் அனைத்தும் திரண்டு வந்து, இந்நூலை சரிகண்டு ஏற்றுக்கொண்டாலும், நான் மட்டும் பிழை என வாதிடுவேன் என சூளுரைக்கவும் செய்தார்.

இந்நூலால் ஊரே பிளவுண்டுவிட்டது. குடும்பங்கள் பிரிந்து விட்டது என முதலைக்கண்ணீர் வடிக்கவும் செய்தார். சபையோர் அவருக்கு நூலில் தவறுகள் இல்லை,என்பதை தெளிவாக் கூறிய பின்பும் தனது பிடிவாதத்தையும் தப்லீக் வெறியையும் சிறிதும் தளர்த்திக் கொள்ளாமலே பிரிந்துபோனார். இந்த அநாகரீகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலும்,அவரின் வார்த்தைப் பிரயோகங்களும் என்மனசில் ஆழ்ந்த தாக்கத்தை உண்டுபண்ணிவிட்டது.

இது இவ்வாறு நிற்க!

1ம்திகதி மே 98 இல், நான் குத்பா ஓத மிம்பரில் ஏறியதும்,ஏலவே திட்டமிட்டிருந்தபடி,என்னை பகிஷ்கரிப்பதாக நினைத்துக்கொண்டு,தப்லீக் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் பள்ளியை விட்டு வெளியேறி அயல் கிராமத்திற்குச் சென்றனர்.

''பாங்குச்சத்தம் கேட்கும் போது, தொழாமல், பள்ளியைக் கடந்து செல்பவன் ஷைத்தான், என்ற நபிவாக்கின்படி பாங்கு சொல்லி குத்பாவுக்கென இமாம் எழுந்ததும் எழும்பிச் செல்பவன் யாரென்பதை புரிந்துகொள்ள சிரமம் இருக்காது. தீனை *''ஹயாத்''* தாக்கும், இந்த சீதேவிகளின் தீன்பணியை நேரிலே கண்ட மக்கள் மனங் குமுறினர். குர்ஆன் சுன்னாவை விட, எமது இயக்கம் தான் மகத்தானது, நாம் மட்டும் தான் உண்மை முஸ்லீம் என்ற மௌட்டீகம்தான் இதிலும் பகிரங்கப் படுத்தப்பட்டது.

''தப்லீக்கின் பணிக்கெதிராக நூல் எழுதப்பட்டுள்ளது. எனக்கண்டால் அதை மறுத்து ஒரு நூலை எழுதியிருக்க வேண்டும். இதுதான் கருத்துச் சுதந்திரத்தின் உண்மையான நிலைப்பாடு.

இலங்கை அரசியலமைப்பின் 126 வது பிரிவின் பிரகாரம் ஒரு மனிதனுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளை, அனுபவிக்க முடியாதபடி,தப்லீக் இயக்கத்தின் செயற்பாடுகள் அமைந்து காணப்படுகின்றன. ஒரு இலங்கைக் குடிமகனின் பேச்சுரிமை, எழுத்துரிமையை மறுப்பது, அவற்றுக்கெதிராக செயற்படுவது அனைத்துமே தேச விரோதச் செயல்களாகும், தண்டனைக்குறிய குற்றமுமாகும்.

எழுத்துச் சுதந்திரத்தை மறுதலித்து தப்லீக்கின் கள்-எலிய, அமீர் மேற்கொண்ட, வன்முறைகளுக்காக மான நஷ்ட வழக்குத்தொடுக்க சட்டம் இடம் தருகிறது. இது தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழக்கறிஞருடன் ஆலோசித்தேன். முஸ்லீம் சமுகத்தின் தன்மானம் கருதியும், இஸ்லாத்தின் பெயருக்கு, களங்கம் கற்பிக்கக் கூடாது என்பதற்காகவும், முஸ்லீம்களில் இப்படியான மௌட்டீக மதக்குழுக்கள் இருக்கின்றது என்பதை வெளி உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டக் கூடாது என்ற உன்னத நோக்கத்தை முன்னிறுத்தியும், நீதிமன்றம் வரை செல்லவில்லை, தப்லீக் ஜமாஅத் இந்த உண்மையை தெரிந்து கொள்ளவேண்டும்.

இறுதியாக நூலுக்கெதிராகவும் எனக்கெதிராகவும், ஊரில் கைஎழுத்து வேட்டையில் தப்லீக் ஜமாஅத் இறங்கி, அதிலும் தோல்வியை தழுவினர். ஊர்ஜமாஅத்தில் பெரும்பாலானோர் நூலில், தவரேதுமில்லை என நிர்வாக சபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கவும் செய்தனர். அந்த அறிக்கைகளில் முக்கியமான கருத்துக்களை வாசகர் நலன் கருதி கீழே தருகின்றேன்.

❖ எமது நாட்டு நடப்பு தனி மனித சுதந்திரத்தை உறுதிப் படுத்தியுள்ளது இதை அடக்கவோ, மறைக்கவோ முறப்படுவது குற்றம். மானநஷ்டம், மனஉளைச்சல், உரிமைபாதிப்பு, போன்ற காரணங்களுக்காக பல இலட்சங்களை நஷ்ட ஈடாகப்பெற யாப்பு வழிவகுத்துள்ளது.

❖ பல நாடுகளில் பரவலாகச் செயற்படும் தப்லீக் ஜமாஅத்தின் சேவைகளைப் போற்றியுள்ள இந்நூல் தப்லீக் ஜமாஅத்தின் குறைபாடுகளையும், சுட்டிக்காட்டியுள்ளதுடன், அவை திருத்தப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது. ஏனைய ஜமாஅத்துக்களின் சில போக்குக்களையும் இந்நூல் கண்டித்துள்ளது.

❖ நூலாசிரியர் எமது பள்ளிவாசலில் கடைமையாற்றுகிற கதீப் என்ற ஒரே காரணத்தால் அவர் சரியெனக் கண்டதை மற்றவர்களுக்கு சொல்வதை எழுதுவதை நாம் தடுக்கமுடியாது. மார்க்க விரோத காரியங்களில் அவர் ஈடுபட்டிருந்தால் ஊருக்கு அபகீர்த்தி ஏற்படும் வண்ணம் செயற்பட்டிருந்தால் நாம் தலையிடுவதில் நியாயம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இந்நூலை தப்லீக்கின் கொழும்பு மாகஸ்"க்கு அனுப்பி, அங்கிருந்து வரும் தீர்வை தப்லீக் ஜமாஅத்தினர் ஏற்றுக்கொள்ளல்.

❖ அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் 'பத்வா'க்குழுவினருக்கு அனுப்பி, இந்நூலில் ஷரீஅத்துக்கு முரணாண கருத்துக்கள் இதில் உள்ளனவா என, அறிதல்.

நூலுக்கு ஆதரவாக இவ்வாரான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டபோதும், சில பசுந்தோல் போர்த்திய புலிகளும், மார்க்கம் என்றால் கிலோ என்ன விலை எனக் கேட்கும் தீன்தாரிகளும் ஊருக்குள் குழப்பத்தையும் பதற்றத்தையும் உண்டாக்கினர்.

கடந்த 02மே, 98 இரவு நிர்வாக சபை கூடியது என்னை புத்தகம் எழுதிய ஒரே காரணத்திற்காக ஊர் கடமையிலிருந்து உடனடியாக நீக்கவேண்டும் என்ற தப்லீக் ஜமாஅத்தின் வேண்டுகோளை நிருவாகத்தினர் நிராகரித்ததுடன், நூல் தொடர்பாக எமக்கு முடிவெடுக்க முடியாது, மாக்கசுக்கு அனுப்பி, வரும் முடிவின் படி செயற்படுவோம் எனக் கூறினர். இக்கூற்றை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. பள்ளிவாசலுக்கு வெளியே, இருளோடு இருளாக, திட்டமிட்டு அழைத்துவரப்பட்ட, வன்முறையாளர்களை ஏவிவிட்டு, நிருவாக சபைக்கெதிராக செயற்படத் தூண்டியதுடன், என்னையும் தாக்குவதற்கு ஏவியிருந்தனர்.

இதுதவிர இந்நூல் தொடர்பாக நான் எதிர்கொண்ட பயங்கர அனர்த்தங்கள் அதிகமுண்டு, அவை ஒரு தனி நூலுக்குரிய சம்பவங்கள்.

***''தப்லீக் அன்றும், இன்றும்''*** முதலாம் பாகம், தொடர்பாகவோ, இந்நூல் (தப்லீம் குர்ஆனுக்கு எதிரான புத்தகமா?) தொடர்பாகவோ, மறுப்பு தெரிவிக்க விரும்பும், தப்லீக் உறுப்பினர்கள், வாசகர்கள் தக்க சான்றுகளுடன் எழுத்து மூலம் தெரிவித்தால், பெருமனதுடன் ஏற்று, மறு பதிப்பில் திருத்திக் கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் கூறப்பட்டுள்ள விமர்சனங்களில் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் இருப்பின், அது தொடர்பாக விளக்கி, ஒரு மறுப்பை, நூலாக வெளியிடலாம். நூல் தொடர்பாக நேரிடையாக பேச விழைபவர்கள் பின்வரும் எனது கோரிக்கைக்கு அமைய, தொடர்புகொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

01. இந்நூலில், (01ம் பாகம் உட்பட) குறிப்பிடப்பட்டும் விடயங்கள் புனித திருக் குர்ஆனுக்கும், அல்-ஹதீசுக்கும் முரண்பட்டதாக நீங்கள் கருதும் பட்சத்தில், அதை ஆதார பூர்வமாக நிருபித்தல்

02. இஸ்லாமிய ஷரீஅத் கோட்பாடுகளுக்கெதிராக ஏதேனும் கருத்துக்கள் இந்நூலில் உள்ளதா?அவற்றை நிருபித்தல்.

03. இஸ்லாமிய அடிப்படைக்கொள்கை ***"அகீதா"*** ஏகத்துவக் கொள்கைக்கு எதிராக இந்நூல் எழுதப்பட்டுள்ளதா என்பதை தெளிவுபடுத்தல்

04. சத்தியத்திற்கெதிரான நடவடிக்கைகளை செய்யுமாறு இந்நூல் ஏவுகிறதா?

05. புனிதமிகு இஸ்லாத்தையும், அதன் இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் இழிவுபடுத்தும் சொற்கள், கருத்துப் பிரயோகங்கள் இதில் உள்ளதா?

06. பித்அத், ஷிர்க், பேன்ற தீய வணக்கங்களை செய்யுமாறு தூண்டுகிறதா?

மேற்கானும், நிபந்தனைகளுக்கு அமைய இவ்விமர்சனம் தொடர்பாக, பேசவோ,எழுதவோ,தப்லீக் அன்பர்கள் முன் வருவார்களாயின்,நன்றியுடன் அதை அங்கீகரித்து, எனது தவறுகளை களைந்து திருத்திக் கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவாக தப்லீக் ஜமாஅத்தினர் தமது தவறுகளை சீர்திருத்தி சமூகத்திற்கு பிரயோசனமாக பாடுபட வருமாறு அறைகூவல் விடுக்கின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்கு எனக்கு துணை நின்றவர்கள், மறக்க முடியாதவர்கள். இதற்கென உசாத்துணை நூல்களை தந்துதவிய இஸ்லாமிய சகோதரர்களுக்கும் இதை, அழகுற அச்சிட்டுதவிய, S அச்சக ஊழியர்களுக்கும், நண்பர் ஷினாசிக்கும், எனது ஆழிய நன்றிகள்.

இரண்டாம் பாகம் அதி விரைவில் வெளிவர வேண்டுமென என்னைத் தூண்டி, உற்சாகமளித்த அன்புக்குறிய வாசகர்கள், நன்றியுடன் நினைவு கூறப்பட வேண்டியவர்கள், வழக்கம் போல் எனது நூற்களை வாங்கிப் படிக்கும் வாசகப் பெருமக்கள், இந்நூலுக்கும் ஆதரவு தந்து, பிறருக்கும் இதை அறிமுகப்படுத்துமாறு வேண்டிக்கொள்கிறேன்.

*"சத்தியம் தோற்றதாக வரலாறு கிடையாது"*

மறுபடியும் சந்திக்கின்றேன் இன்ஷா அல்லாஹ்

அன்புடன்
அறபாத்

71, BASHEER STREET,
HAVADICHENAI,
VALAICHENAI.
1998.09.01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்லீக் அன்றும் இன்றும்

*(முதலாம் பாகம் குற்றச்சாட்டும், பதில்களும்)*

விமர்சனம் - ஆய்வு இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்வது அவசியம். விமர்சகன் என்பவன் கிடைக்கும் தள ஆய்வுகளின் தகவல், பத்திரிகைச் செய்திகள், உஷாத்துணை நூல்கள் ஆகியவற்றின் துணையுடன் தன் கருத்துக்களை முன்வைத்து ஒப்பீடு செய்ய முனைவான்.

சிலநேரம். விமர்சகனின் நேரடி அனுபவங்கள் மூலமாக உள்வாங்கிக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலும் இந்த விமர்சனம் அமையும்.

விமர்சகன் என்பவன், ஒட்டகம் செடிகளைவிட்டு விட்டு, முற்களைத் தின்பது போல், ஒரு குறிப்பிட்ட விடயத்தை விமர்சிக்கும் போது அதன் நன்மை, சாதகவிடயங்களை தவிர்த்து விட்டு, தீமைகளையும் பாதகமான விடயங்களை மட்டும் நோக்காகக் கொண்டு, விமர்சிக்கக் கூடாது. இது களை எடுக்கிறோம் என்ற பெயரில், பயிர்களையே பிடுங்கிப் போடும் முயற்சியாகும்.

தப்லீக்பற்றிய எனது கருத்துக்களும் இவ்வகையிற்தான் அமைந்துள்ளது. தப்லீக் ஜமாஅத்தின் சாதகபாதங்களை ஒப்பிட்டு, அது சீர்திருத்தப் பாதையில் த:.வா செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினேன்.

விமர்சகன் தான்பெற்றுக் கொண்ட தகவல் புள்ளி விபரங்களை தழுவியே தன் கருத்தை நிலை நிறுத்த முனைவான். இதில் நிகழும், பிற்கால கருத்து,புள்ளிவிபரங்களின் மாற்றம், அடிப்படை உண்மையை, எப்போதும் பாதிக்காது. எனது நூல் ஒரு விமர்சனமே தவிர, ஆய்வு நூலல்ல. அதை ஏற்பதும் சீர்திருத்துவதும். சம்பந்தப்பட்டோரின் மனோநிலையை பொறுத்த விவகாரம். விமர்சனத்தில் தொக்கி நிற்கும் தவறுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டி ஒரு மாற்று நூலை எழுதலாம், இது கருத்தை கருத்தால் மோதும் ஜனநாயகப் பண்பு.

## முதலாவது குற்றச்சாட்டு

*''அட்டைப்படம். உருவப்படத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இஸ்லாத்திற்கே முரணான செயல்''.*

இது உருவப்படம் பற்றிய தெளிவற்ற சிந்தனைக் குழப்பத்தில் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டு. முதலில் உருவத்தின் வரைவிலக் கணத்தை நோக்குவோம்.

ஒரு பொருளுக்கு வடிவம் கொடுக்க விரும்பினால் அதன் சுயரூபத்தை அடிப்படை, இம்மியளவும் பிசகாமல் பொருத்த வேண்டும். வரையப்பட்ட ஒரு உருவத்தை நோக்கும் வாசகன். அதன் அசல் வடிவத்தை அப்படியே தரிசிக்க வேண்டும். துலாம்பரமற்று அல்லது உறுப்புக்களை வேறு ஒன்றுடன் பொருத்தி வைத்தோ இருக்குமேயானால், அதன் சுயத்தையும் தனித்துவத்தையும் அது இழந்து விடும். உதாரணமாக, மனித உடலில், சிரசிற்குப் பதிலாக சிங்கத்தின் தலையை வரைந்துவிட்டு, இவ்வுருவத்தை, மனிதன் என்றாலும், ஏற்கமுடியாது சிங்கம் என்றாலும் ஏற்கமுடியாது. தவிர, நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட உருவப்படத்திற்கான மாதிரிவடிவம் இவ்வட்டைப்படத்தில் இல்லை. (இது நீண்ட ஆய்வுக்குறிய விடயம்)

தப்லீக் அன்றும் இன்றும் நூலின் அட்டைப்படம் (முதலாம் பாகம்)ஒரு முழுமையான உருவத்தைக் காட்டும் அமைப்பல்ல. அதில் வரையப்பட்டுள்ள மனித உருவங்களின் அங்க உறுப்புக்களை தனித்தனியே யாரும் பிரித்துக்காட்டவும் முடியாது. இதற்கு கார்ட்டூன் (கேலிச்சித்திரம்) எனப்படும். இது ஒரு தனிக் கலையாக மேலை நாடுகளில் வளர்ச்சியடைந்துள்ளதுடன், இதற்கென கல்வித் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டூன் என்பது உணர்ச்சிபூர்வமாகப் பேசும் சித்திரம், கீழே குறிப்பெழுதாத அசல் கார்டூன்கள் பாவனையினாலும், அனுமானத்தினாலும், கோடுகளில் படைக்கப்பட்டிருக்கும். உணர்வு மாறுதல்களால் தன்னை அறிமுகம் செய்து கொள்ளக்கூடிய சக்தி நல்ல காட்டூன்களுக்கு இருக்க வேண்டும். இந்தக்காட்டூன் மூலம் தப்லீக் ஜமாஅத்தின் கண்மூடித்தனமான தக்லீதை (பின்பற்றுதலை) உணர்த்த எண்ணினேன்.

எவ்விடயத்தையும் பகுத்தாய்து சிந்தித்து உணர்பூர்வமாக முடிவெடுப்பதற்குப் பதிலாக உணர்ச்சிகளுக்கும், இயக்க நலன்களுக்கும் முதன்மை அளித்து செயற்படுவதை சாடுவதுதான் இதன் நோக்கம்.

மற்றும் திருமறைக் குர்ஆனைவிட, த..லீம் புத்தகத்திற்கு அளவுகடந்த மதிப்பும் மரியாதையும் தருவதை காட்டூன் வெளிப்படுத்துகின்றது. தப்லீக் ஜமாஅத்தின் சகல தக்லீத் பண்புகளுக்கமைய எக்கோணத்திலிருந்து சிந்தித்தாலும், அதற்கு பொருத்தமாகவே கேலிச்சித்திரம் தோற்றம் தரும்.

சாதாரண மனிதரால் பொய்யும், கட்டுக்கதைகளும், குர்ஆன் ஹதீதுக்கு முரண்படும், சம்பவங்களுமாக எழுதப்பட்ட த..லீம் புத்தகம் படித்த தப்லீக் உறுப்பினர்களின் சிந்தனை சக்தியைக் கூட, மழுங்கடித்து விடுகின்றது. அது ஒரு அங்கீகரிக்கப்பட்ட வேத நூல் போலவும் சிலரால் போற்றப்படுகிறது. இதை கேலிச்சித்திரமொன்றின் ஊடாக கண்டிக்க விரும்பினேன். இது ஒரு முழுமை பெற்ற உருவப்படம், அல்லது சித்திரம் எனக்கருதும் எவரும் அது தொடர்பான "இஸ்லாமிய சட்டத்தை விளக்கினால் ஏற்றுக்கொள்வேன்.

இரண்டாவது குற்றச்சாட்டு

***"தப்லீக் ஜமாஅத்தில் ஐந்து பேர் அமீராக இல்லை"***

தப்லீக் அன்றும் இன்றும் பக் 21 (முதலாம் பாகம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்லீக்கின் ஒழுங்கமைப்பில் தற்பேது ஐந்து பேர் செயற்பட்டு வருகின்றனர். எனக் குறிப்பிட்டிருந்தேன். ஐந்து பேர் இல்லை, ஒருவர்தான் என்பது தப்லீக்கின் வாதமாகும். ஐந்து பேர் அமீர்களாக செயற்பட்டு வந்தனர் என்பதற்கு பின்வரும் கூற்று சான்று பகிர்கிறது.

''பெரிய அமீர் ஷாஹிபின் மறைவுக்குப் பின் கடந்த 1982 க்குப் பின் அவர் வகித்த பொறுப்பினை தொடர்ந்து செயல்படுத்துவதற்காக மதிப்பிற்குறிய ஹஜ்ரத்ஜீ இனாமுல் ஹஸன் அவர்கள் ஐந்துபேர் கொண்ட ஒரு பொறுப்புதாரிகள் குழுவை நியமித்தார்கள் அவர்கள் முறையே

| | | |
|---|---|---|
| 1 | அல்-ஹாஜ்: எம்.எஸ்.எம். உவைஸ் | (மல்வானை) |
| 2 | அல்-ஹாஜ்: ஏ.ஆர்.எம். நிஜாமுத்தீன் | (பாணந்துரை) |
| 3 | அல்-ஹாஜ்: எம்.எஸ்.எம். பாறுக் | (கொழும்பு) |
| 4 | அல்-ஹாஜ்: ஹாஜா முயினுத்தீன் | (பாணந்துரை) |
| 5 | அல்-ஹாஜ்: மஹ்முத்லெப்பை | (கெட்டகும்புற) |

மேற்கண்ட ஐவரில் அதாவது மள்வானை உவைஸ் ஹாஜியார், அவர்களும் பாணந்துறை ஹாஜா முயினுத்தீன் ஹஜியார் அவர்களும் காலமாகி விட்டார்கள். ஏனைய மூவரும் தங்களால் இயன்றளவு பங்களிப்புகளை நல்கி வருகிறார்கள்.

***நூல்: இலங்கை தப்லிக்***
***ஜமாஅத்தின் முன்னோடிகள்.***
***பக் : 47***
***ஆசிரியர் : ஏ.ஜே.எம். அஷ்றப் புர்கானி***
***பதிப்பு : 1993***

தப்லீக் ஜமாஅத்தின் முன்னணி செயற்குழுவில் உலமாக்கள் எவரும் இடம் பெறவில்லை என்பதுடன், ஐந்துபேரில், மூவர் தற்போதும் அமீர்களாக உள்ளனர் என்பதும் தெளிவு.

ஒருவரை அமீராகத் தெரிவு செய்து, அவரின் கீழ் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்"ரா சபையை நிறுவமுடியாமற் போனதற்கான காரணங்கள் யாது என்ற நியாயமான ஐயங்களுக்கு தப்லீக் ஜமாஅத்திடமிருந்து தெளிவான பதிலேதும் வரவில்லை, இவர்கள் அமீர்கள் அல்ல, சூரா சபை என்றால் அந்த அமைப்புக்கு ஒரு அமீர் வேண்டுமே. அகில இலங்கை ரீதியாக தப்லீகின் ஏக தலைவர் (அமீர்)அந்த இயக்கத்தை வழிநடத்தும் பொறுப்புதாரி யாரென்ற வினா பதிலில்லாமலேயே கிடப்பில் கிடக்கின்றது.

அச்செயற்குழுவில், உலமாக்கள் முப்திகள் மதனிகள் எல்லாம் இந்த வியாபாரிகளுக்கு அனுசரணையாக பின் வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

*நூல் : இலங்கை தப்லீக் ஜமாஅத்தின் முன்னோடிகள்*
*பக் : 48*

எனவே மார்க்க அறிவும் தகுதி வாய்ந்த திறமையான உலமாக்களும் திட்டமிட்டு ஓரங்கட்டப்படிருப்பதாகவே புலப்படுகிறது. அல்லது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாக நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டது போல். ''அறிவிலிகள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப் படுவார்கள், பொறுப்பற்றவர்களிடம் அமானிதங்கள் ஒப்படைக்கப்படும்''என்ற நபிமொழிக்கேற்ப இத் தெரிவு நிகழ்ந்திருக்கலாம்.

த.்.வாப் பணி என்பது வல்ல அல்லாஹ்வினால் மனிதனிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதம். திருமறைக் குர்ஆன் இதுபற்றி மிகத்தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

''நிச்சயமாக நாம் அமானிதத்தை வானங்கள் பூமி, மலைகள் ஆகியவற்றின் மீது (அதைச்சுமந்து கொள்ளுமாறு) எடுத்துக் காட்டினோம். அப்போது அதைச் சுமந்து கொள்வதிலிருந்து அவை விலகிக் கொண்டன, இன்னும் அதைச் சுமப்பதிலிருந்து அவை பயந்தன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆனால்)மனிதனோ அதைச் சுமந்து கொண்டான். நிச்சயமாக அவன் (அமானிதத்தை நிறைவேற்றும் விஷயத்தில்)பெரும் அனியாயக்காரனாக அதன் (கடமையை) அறியாதவனாக இருக்கின்றான்.

*அல்-குர்ஆன் (33:72)*

வானம், பூமி மலைகள் ஆகியவற்றால் சுமக்க முடியாத, செய்ய முடியாத பணிதான் பிரச்சாரப்பணி. த..வாவை திறம்படச் செய்வதன் மூலம். மனிதன் அல்லாஹ்வின் பொறுப்பை நிறைவேற்றியவனாக கருதப்படுகின்றான். அல்லாஹ் தன்மீது சுமத்திய அமானிதத்தை எந்த இடைச் செருகளும் சுய விருப்பும் வெறுப்புமின்றி பிறருக்கு எத்தி வைப்பது மனிதன் மீது விதியாக்கப்பட்ட கடமை.

இதை திறன்பட முன்னெடுத்துச்செல்ல, தகுதியானவர்களைத்தான் அல்லாஹ்வும் தேர்ந்தெடுத்தான். அவர்களின் விவேகமும் புத்திசாலித்தனமும், இறை கட்டளையை அமுல்படுத்த மேற்கொண்ட கடின முயற்சியும், அயராத உழைப்பும், எதிரியின் மூர்க்கத்தனமிகு கேல்விகளுக்கெல்லாம் பதிலிறுத்த சாதுரியமும் ''தாயி''களுக்கு தக்கதொரு படிப்பினை.

அதற்காக-இத்தகைய அறிவுத் திறனை பெற்றபின்புதான், முழு மனித சமுதாயமும் த..வா செய்ய வேண்டுமெனக் கருதக் கூடாது அது சாத்தியமுமில்லை. ஓர் இஸ்லாமிய இயக்கத்தை அல்லது முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்று வழி நடாத்தும் ஒருவருக்கு குறைந்த பட்சம் குர்ஆன் ஹதீஸுடைய முழு அறிவும் இருக்க வேண்டும். இது ஒரு சமூகப் பெறுமானத்திற்கு,முழு ஆன்மாவையும் பக்குவப்படுத்த இன்றியமையாத தேவையாகும்.

அல்-குர்ஆன் எதிர்பார்க்கும் தலைமைத்துவம் என்பது இறை சட்டங்களை பூமியில் அமுல் நடத்தக்கூடிய சமுதாய அமைப்பைப் பயிற்றுவிக்கும் நிர்வாகம்தான். உலகாயத நோக்கங்களை அடைய தலைமைத்துவத்தை பொறுப்பேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்பிரயோகம் செய்பவர்களை, குர்ஆன் வன்மையாக சாடுகின்றது.

''அத்தகைய அமானிதத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு மாறாக நடக்கும் முனாபிக்கான (வேஷதாரிகளான)ஆண்களையும், முனாபிக்கான பெண்களையும், இணை வைத்துக்கொண்டிருக்கும் பெண்களையும் அல்லாஹ் வேதனை செய்வதற்காகவும், (அந்த அமானிதத்தை ஏற்றபின் மதித்து நடக்கும்) விசுவாசிகளான ஆண்களையும், விசுவாசிகளான பெண்களையும் அவர்களின் ''தவ்பாவை ஏற்று மன்னிப்பதற்காகவும் (இவ்வாறு எடுத்துக்காட்டினான்)மேலும்,அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக மிக்க கிருபையுடையவனாக இருக்கிறான்.

*(அல்குர்ஆன் 33:73)*

துரதிஷ்டம் யாதெனில் நிருவாக தெரிவுகளின் போது இறையச்சம், அறிவு விவேகம்,இறை கட்டளைகளை அமுல்படுத்தக்கூடிய திறன், துணிவு ஆகிய திறமைகளைப் பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டு, செல்வம்,புகழ் சமூகச் செல்வாக்கு செலுத்தும் மேட்டுக்குடியினரே தலைமைத்துவங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர்.

இவர்கள் அல்லாஹ்வின் அமானிதத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக தமது சுய லாபங்களை தக்கவைத்துக் கொளள்வும், பதவியை பற்றிக் கொள்ளவுமே கூடிய கவனம் செலுத்துகின்றனர். எனவே, அடிப்படையில் இருந்தே தப்லீக் புனரமைக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது வாதம். தற்போது இருக்கின்ற பொறுப்புதாரிகளிடம், குர்ஆன்-ஹதீது அறிவு எந்தளவுக்கு இருக்கின்றது என்பதை விட, அதை செயல் படுத்தும் ஆர்வமாவது உள்ளதா என்பதும் சந்தேகமே.

## மூன்றாவது குற்றச்சாட்டு.

''*ஜ"மைராத்*'' இரவுகளில்தான் சகோதர இயக்கங்களுக்கெதிராக சதியாலோசனைகளும் சிலரால் தீட்டப்படுகிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தப்லீக் அன்றும் இன்றும்: பாகம் 01*
*பக்கம்: 26*

மேற்படி விமர்சனத்தை ஆதார பூர்வமாக நிருபிக்க வேண்டுமென தப்லீக் ஜமாஅத்தினர். (29 எப்ரல் 98) என்னைக் கேட்டனர்.ஏற்கனவே குறிப்பிட்டது போல் விமர்சகன் என்பவன் தனக்குகிடைத்த தகவல்களின் அடிப்படையில். அல்லது அனுபவ அறிவின் வெளிச்சத்தில், தனது அபிப்பிராயத்தை எழுதமுடியும். மேற்குறித்த எனது விமர்சனமும் எனது நேரடி அனுபவத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களாகும்.அனுபவித்திற்கு ஆதாரம் காட்டச் சொல்வது வடிகட்டிய முட்டாள்தனமாகும்.

ஒருவருடம் ***“ஜ்மேராத்”*** நடைபெறும் பள்ளியொன்றில் (குருநாகல் மாவட்டம்) நொன் கடமையாற்றிய போது, ***“வஹ்ஹாபிகள்”*** ஜமாஅதே இஸ்லாமிக்காரர்களை அடக்குவது எவ்வாறு என்ற ஆலோசனைகள் அங்கு நடந்தேறின.

பல ஊர்களிலிருந்து வந்து குவியும், தப்லீக் குழுக்கள் இது சம்பந்தமாக ஒருவருக்கொருவர் கூடிப்பேசி சகோதர இயக்கங்களின் செயற்பாட்டை நிறுத்துவது எப்படி என்ற விவாதத்தில் ஈடுபட்டிருப்பதை நான் அவதானித்தேன். இது பகிரங்கமான ஒரு ஆலோசனையாகவோ,மேலிடத்து உத்தரவுடன் நடைபெறும் கலந்துரையாடலாகவோ இருப்பதில்லை.

இதுதனிப்பட்ட தீவிர ஜமாஅத்து வணங்கிகளின் ஒன்று கூடலாகவே இருக்கும். எனினும் இந்த விடயங்கள் குறித்து மேலிடங்களுக்கு தெரியாமலும் இருப்பதில்லை.

தப்லீக் ஜமாஅத்து உறுப்பினர்களால் பிற இயக்க உறுப்பினர்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்படுமிடத்து. இந்த விடயத்துக்கும் எமது ஜமாஅத்துக்கும் தொடர்பு கிடையாது. குறித்த நபரை எமது ஜமாஅத்திலிருந்து நாங்கள் நீக்கிவிட்டோம் என்ற மழுப்பலான பதிலை தொடர்ந்தும் மேலிடம் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது.

எனினும் மேலிடத்தால் நீக்கியதாக கதையளக்கப்பட்ட அதே நபர் ஜமாஅத் சூராக்களிலும், மஹல்லா வேளைகளிலும், தவராது பிரசன்னமாகி இருப்பதையும் காணலாம். ஓர் அதிரடி ஜமாஅத் தப்லீக்கின் விரோதிகள் என இனங்காணப்படுவோரை கவனிப்பதற்கென சுயேற்சையாக செயல்பட்டு வருவது கண்கூடு (கடந்தகால, சம்பவங்களும், அண்மைக்கால நீர்கொழும்பு-திஹாரி, கள்-எலிய சம்பவங்களும் தக்கசான்று)

இவர்களின் பிரதான பணி குர்ஆன் விளக்கவுரை, ஹதீது வியாக்கியானம், பிக்ஹ் வகுப்புகளை குழப்புவது, பிற இயக்க சகோதரர்களின் இஸ்லாமிய பிரச்சாரத்துக்கு எதிராக ஊரிலுள்ள பாமர இளைஞர்களை தூண்டிவிடல், முதலாளிமார், உள்ளூர் அரசியல்வாதிகளின் அனுசரணையுடன் மாற்றுக் கருத்து கொண்டோருக்கு அச்சுறுத்தல் விடுத்தல், பள்ளி வாசலின் நிர்வாகத்தை கைப்பற்ற முயற்சித்தல், இதற்காக பல குறுக்கு வழிகளையும் நாடுவர், காபிர்களின் உதவியையும் பெற்றுக் கொள்வர். (அண்மைய திஹாரி அசம்பாவிதங்கள் சாட்சி) அல்லது நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்காமல் குழப்புதல் போன்ற அதிரடி நடவடிக்கைகளுக்கு இந்த ஜமாஅத் வேஷம் போட்ட வன்முறையாளர்களை ஈடுபடுத்துவது குறித்து தப்லீக் தலைமை பீடம் மௌனம் காப்பதன் மர்மம் என்ன?

இவர்களுக்கு இத்தகைய மூளைச் சலவை யாரால் செய்யப்பட்டது. தொடர்ந்தும் மாற்றுக்கருத்துடைய சகோதர இயக்க செயற்பாடுகளை கண்காணித்து அவர்களின் த'.வாவை முடக்குவதற்கான பின்னணிதான் என்ன? மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்பது போல், இந்த அடாவடித்தனங்களை தப்லீக்கின் பெயரால் அரங்கேற்றி வருவதை அதன் உயர் பீடம் மௌனமாக அங்கீகரிக்கின்றதா?

நேரடி அனுபவத்திற்கு ஆதாரம் காட்டும்படி கள்-எலிய தப்லீக் ஜமாஅத்தின் மேன்மை தங்கிய அமீர் ஷாகிபும், அவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவும் வேண்டிக் கொண்டனர், எனது கள அனுபவத்தைச் சொன்ன போது, ''அது மூன்று வருஷங்களுக்கு முன் நடந்தது, இப்போது எங்கட ஜும்மா ராத்திரிக்கு வந்து பார்த்தீர்களா''? எனவேறு கேட்கவும் செய்தனர்.

மூன்று வருஷங்களுக்கு முன் நடந்த கதையை ஒத்துக் கொள்ளும் மேன்மை தங்கிய தப்லீக் உறுப்பினர், இப்போது அவ்வாறு நடப்பதில்லை என மறுப்பது, குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை, என்பது போல் இருக்கிறது.

விமர்சனத்திற்கு களஅனுபவங்கள் ஒரு உந்து சக்தி என்பதுடன் அனுபவத்தின் மொழி பெயர்ப்பு, விமர்சகனின் உயிரோட்டமுள்ள கருத்துக்களாகும். இந்த அடிப்படை அறிவை தப்லீக் உணர்ந்து செயற்படுமென எதிர்பாக்கின்றேன்.

இம்மூன்று குற்றச்சாட்டுத் தவிர, ஏனைய விமர்சனங்களை தப்லீக் ஜமாஅத்தால் நிராகரிக்க முடியவில்லை, குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களும் தெளிவின்மையால் ஏற்பட்ட குழப்பத்தில் உளறியது என்பதை வாசகர் தெளிவாக உனர்ந்திருப்பர். இயன்றவரை அவர்களின் குற்றச்சாட்டுக்ளுக்கு ஆதாரபூர்வமான தக்க பதிலை தந்திருக்கின்றேன். இனி சில உப தலைப்புக்களை சுருக்கமாக அலசுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்லீக் ஒரு பித்அத்தான இயக்கம். அவர்களிடம் நபி (ஸல்) அவர்களினதும் ஸஹாபாக்கள், தாபிஈன்களினதும் நல்ல விடயங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. சிலர் சூபித்துவக் கொள்கை உடையோராகவும். மற்றும் சிலர் பித்அத் வாதிகளாகவும் இருக்கின்றனர்.

ஜிஸ்திய்யா, காதிரிய்யா, ஸஹர்வர்த்தியா, நக்ஷ பந்தியா போன்ற தரிக்காக்களைத் தழுவியதாக தப்லீக்கின் ஆரம்பம் காணப்பட்டது. ஆரம்ப கால பாமரர்கள் இதன் விபரீதம் தெரியாமல் நல்லதொரு இயக்கம் எனப் பின்பற்றி இதை வளர்த்து வந்தனர். அஹ்லுஸ் ஸுன்னத் குழுவினர் குர்ஆன், ஹதீஸை மகிமைப்படுத்துவது போல் தப்லீக் இயக்கத்தினர் தஃலீம் புத்தகத்தை கண்ணியப்படுத்துகின்றனர்.

வழிகெட்ட ஷியாக்கல் ஹிகாயத், குராபத், செய்கு வணக்கம், இமாமியத் போன்ற கொள்கைகளை ஆதரித்துப் போற்றி வருவது போல் தப்லீக் ஜமாஅத்தும் பெரியார் மோகம் கதையளத்தல் போன்றவற்றை தொடர்ந்தும் செய்து வருகின்றனர்.

*பிரபல அறிஞர் உஸ்தாத் செய்புர் ரஹ்மான் அஹ்மத் அவர்கள் தப்லீக் அமைப்பினர் பித்அத்வாதிகள் என்ற கருத்தையே கொண்டுள்ளார்.*

பார்க்க : கவ்லுத் தப்லீஃ பித் தஹ்தீரி மின்
ஜமாஅதித் தப்லீஃ
பக்கம் : 22

யார் பித்அத் வாதிகளை கண்ணியப்படுத்துகிறாரோ அவர், அல்லாஹ்வுடைய தீனை தகர்ப்பவனுக்கு உதவுபவன் போலாவான். என்ற நாயக வாக்கையும் இதற்குச் சான்றாக அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

நபிகள் நாயகம் விலக்கிய விடயங்களை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் செய்து வருவதால் அவர்கள் ஒரு பித்அத்வாதிகள்தான் என மேற்படி நூலின் ஆசிரியர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

***அஷ்-ஷெய்ஹ் முஹம்மத் இப்னு இப்ராஹிம்*** அவர்கள் கூறுகிறார்கள் : வழிகேட்டிலும், பித்அத், ஷிர்க்குகளிலும், தரீக்காக்களிலும் ஆசையூட்டி மக்களை அழைத்துச் செல்லும் பாமரத்தனமான தப்லீக் வேலைக்கு ஊர்விட்டு ஊர் பயணம் செய்வதும், குராபத்துக்களை செய்து கொண்டு குர்ஆனை இகழ்ந்து த..லீமை உயர்த்திப் பேசும் அவர்களுடன் சேர்ந்திருப்பதும் தவறான செயலாகும்.

*மேற்படி நூல்*
*பக் :* 30

***பலீல் இப்னு இயாழ் (ரஹ்)*** அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் : யார் பித்அத் வாதியை விருப்புகின்றானோ, அவனுடைய அமல்களை அல்லாஹ் பாழாக்கிவிடுவதுடன், அவனுடைய இதயத்தை விட்டும் இஸ்லாமியச் சுடரை அகற்றிவிடுவான்.

மேலதிகத் தகவல்களை பெற ***பாகிஸ்தான் அறிஞர் முஹம்மத் அஸ்லம் எழுதிய ஜமாஅத்துத் தப்லீ.., அகீதாவும் பெரியோர்களின் சிந்தனைகளும்*** என்ற நூலைப் பார்வையிடுக. இனி குர்ஆனுக்கு நிகராக தப்லீக் அமைப்பினரால் வாசிக்கப்பட்டுவரும் த..லீம் பற்றி பார்ப்போம்.

இது வேதமாகும், இதில் எத்தகைய சந்தேகமுமில்லை, பயபக்தியுடையோருக்கு இது நேர்வழி காட்டியாகும். (2:1) இது குர்ஆனைப் பற்றி, எழுப்பிய ஐயங்களுக்கு அல்லாஹ்வின் உறுதியான பதில். இதுபோன்று, இன்னும்பிற சவால்களை திருமறைக்குர்ஆன் விடுக்கின்றது.

''இந்தக் குர்ஆனைப் போன்று கொண்டுவருவதற்கு மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்தாலும், இதனைப்போன்று அவர்கள் கொண்டு வரமாட்டார்கள். அவர்களிற் சிலர், சிலருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாக இருந்தாலும் சரியே'' என்று நபியே நீர் கூறுவீராக.

*அல்-குர்ஆன் (17:88)*

''மேலும் நமது அடியார் மீது நாம் இறக்கிவைத்த இவ்வேதத்தில் நீங்கள் சந்தேகித்தால், அல்லாஹ்வைத் தவிர, உங்கள் உதவியாளர்களை-எல்லாம் அழைத்துக் கொண்டு, நீங்கள் உங்கள் கூற்றில் உண்மையாளர்களாக இருப்பின், இது போன்ற ஒரு அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள்.''

*அல்-குர்ஆன் (2:23)*

அல்-குர்ஆனையும், நபி (ஸல்) அவர்களதும் ஆதார பூர்வமான சுன்னத்துக்களையும், பகிரங்கமாகவும், ரகசியமாகவும் அவமதித்து, மக்கள் மத்தியில் நல்ல கொள்கையுடையோர், என நாடகம் நடத்திக்கொண்டிருக்கும் தப்லீக் ஜமாஅத்தின் த..லீம் தொகுப்பை முழுமையாக இங்கு விமர்சிப்பது நோக்கமல்ல; இதுதொடர்பான நூல்கள் விரிவாக வந்துவிட்டன.

அது, திருமறைக் குர்ஆனுக் கெதிரான கருத்துக்களை, ஆதரிக்கின்றது. பள்ளிவாயில்கள் தோறும் பக்திப் பரவசத்துடன் படிக்கப்பட்டு வருகின்றது. அதில் கூறப்படும் கப்ஸாக்கள் கறாமத்துக்களாக ஈமான் கொள்ளப்படுகின்றன.

இது எவ்வளவு பெரிய ஷிர்க்கும் அநியாயமும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். த..லீம் வாசிக்க மறுப்பவன், அதில் தவறுகள் உள்ளதென நிரூபிப்பவன் தாக்கப்படுகிறான். அச்சுறுத்தப்படுகிறான் என்பதிலிருந்து த..லீம் புத்தகம் குர்ஆனை விட, தப்லீக் உறுப்பினர்களிடம் பெற்றுள்ள செல்வாக்கைப் புரிந்து கொள்ளலாம்.

மேலும் குர்ஆன் விளக்கவுரை நடைபெறும் இடங்களில் தப்லிக் ஜமாஅத்தின் சில உறுப்பினர்கள் அச்சுறுத்தலாக இருப்பதுடன் அதைக் கூச்சலிட்டு குழப்புவதையும் நிதர்சனமாகக் காணலாம். குர்ஆன் விளக்கவுரை நடைபெறும் இடங்களுக்கு செல்வதை தடை செய்வதும். அங்கு செல்பவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலிசெய்வதும், இன்னும் ஒருபடி சென்று. த∴லீம் வாசிப்பதற்குப் பதிலாக குர்ஆன் மொழிபெயர்ப்பு வாசிக்கப்பட்டால், அதை மூர்க்கத்தனமாக எதிர்ப்பதும் - த∴லீம் குர்ஆனுக்கு எதிரான ஒரு புத்தகம் என்பதை தெளிவுபடுத்துகிறது.

இது அப்பட்டமான குரைஷிக் காபிர்களின் கொள்கை. இதை அருள்மறை குர்ஆன் மிகத் தெளிவாக உணர்த்துகிறது. ''நிராகரித்து விட்டார்களே! அத்தகையோர், (மற்றவர்களிடம்) நீங்கள் இந்தக் குர்ஆனைக் கேட்காதீர்கள், அது ஓதப்படும் போது மற்றவர்கள் கேட்காதிருக்க அதில் கூச்சலிடுவது போன்ற வீணானவற்றையும் செய்யுங்கள், நீங்கள் அதனால் மிகைத்து விடலாம் என்று கூறினர்''

***அல்-குர்ஆன் (41:26)***

''தப்லீக் பணி மும்முரமாக நடைபெறும் உங்கள் பகுதிகளிலே த∴லிமுக்குப் பதிலாக, குர்ஆன் விளக்கவுரை வாசிப்போமா.? எனக் கேட்டுப் பாருங்கள், தப்லீக்கின் சுயம் வெளுத்துவிடும். இதற்கோர் உண்மைச் சம்பவம்.

கடந்த 09.05.98 ராஜகிரிய அல்மோதியா மாவத்தையில் ஓர் உலமா குர்ஆனை கையிலேந்தி வாசித்து விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதைக் கண்ட தப்லீக் உறுப்பினர் ஒருவர் அடிபட்ட வேங்கையாய் வெகுண்டு வருகிறார். உலமாவின் கையிலிருந்த குர்ஆனை ஓங்கித்தட்டி விட்டு, இதையெல்லாம் வாசிக்கக் கூடாது, இது குழப்பத்தை 'பித்னா'வை உண்டாக்கும்'' என உறுமிவிட்டுப் பேசுகிறார். குர்ஆன் சொல்கிறது. இது வேதநூல், பயபக்தியுடையோருக்கு நேர்வழிகாட்டும்.

***அல்-குர்ஆன் (2:2)***

தப்லீக் அன்பரோ இது பித்னாவை உண்டாக்குமென குர்ஆனுக்கு எதிராக போர்பிரகடனம் செய்கிறார். குர்ஆனின் வார்த்தையில் கூறுவோமாயின்.

''அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளில் அவனுடைய நாமத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதைத் தடுத்து அவற்றை பாழாக்க முயற்சிப்பவனை விட மகா அக்கிரமக்காரன் யார்?

2: 114

''அவனுக்கு நம்முடைய வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால் இது முன்னோர்களின் கட்டுக்கதைகள், என அவன் கூறுகிறான்.

*அல்குர்ஆன் (83:12)*

மக்கத்துக் காபிர்கள் இந்தக் குர்ஆனை கேட்கும்போதெல்லாம் இது குளப்பமுடையது, இது ஒரு பைத்தியக்காரனின் புலம்பல் ஒரு கவிஞரின் கவிதை என்றெல்லாம் பரிகாசம் செய்தனர்.

அவர்களுக்கு அந்தக் குர்ஆன் அறைகூவல் விடுத்து, சவால்விட்டது. ''நபியே, இதை அவர் பொய்யாக கற்பனை செய்து கொண்டார் எனக்கூறுகின்றனர். இதைப்போல் பத்துவசனங்களை கற்பனையாக கொண்டுவரும்படி அவர்களுக்கு கூறுவீராக''

இத்தகைய மாசு மறுவற்ற குர்ஆனின் கருத்துக்களை தகர்த்து, விசுவாசிகளின் அடிப்படைக் கோட்பாடுகளை சிதைக்கும் கைங்கரியத்தை த.்.லீம் புத்தகம் செய்கின்றது. இது ''பித்னா'' வை உண்டாக்குமென, அவர்கள் கருதி செயற்பட்டு வருகின்றார்கள். அது நேர்வழிமிக்கது, சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டக் கூடியது. (2:185)என அல்-குர்ஆன் கூறுகிறது.

வஹ்ஜதுல் வுஜுூத். எல்லாம் அல்லாதான், என்ற இந்துமதத் தத்துவத்தை த.்.லீம் ஆதரித்துப போற்றியுள்ளது. இதன் பிரச்சாரகர் வழிகெட்ட சூபி இப்னு அறபியைப் போற்றி எழுதும் ஷகரிய்யஷாஹிப் ''புசூசுல் ஹிகம்'' என்ற இவனது நூலிருந்தும் ஆதாரம் காட்டுகிறார். இப்னு அரபியின் வழி கெட்ட சூபித்துவ நச்சுக் கருத்துக்களுக்கு வக்காலத்து வாங்கும் த.்.லீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம்தான், இன்று பள்ளிவாயல்கள்தோறும், வீடுகள், கடை தோறும் பக்தியுடன் பரவசமாய் படிக்கப்பட்டு வருகின்றது. இப்னு அறபியை காபிர் என இமாம்கள் ஏகோபித்து தீர்மானித்துள்ளனர்.

இமாம்களான இப்னுகதீர், இப்னு ஹஜர் அஸ்கலானி, இப்னு கல்தூன், தகியுதத்தீன், அல்லாமா முல்லா அலிகாரி உட்பட 18க்கு மேற்பட்ட இமாம்கள் இவனை 'காபிர்'என்றே தீர்ப்பு வழங்கியுள்ளனர். இந்த வடிகட்டிய இறை மறுப்பாளனை ஷகரிய்யா ஷாகிபு ஷைகுல் ஆரிபீன், ஞானவான்களின் தலைவர் முஹியித்தீன் இப்னு அறபி (ரஹ்) எனக்குறிப்பிட்டு ''லைலதுல் கத்ர்'' மறைக்கப்பட்டதற்கான காரணம் என்ற தலைப்பில் இப்னுஅறபியின் பிதற்றல்களை சேர்த்துள்ளார்.

''.....ஷைகுல் ஆரிபீன் முஹியித்தீன் இப்னுல் அறபி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். ஆண்டு முழுவதும் லைலதுல் கத்ர் மாறி மாறி வருகின்றது என்பது தான் என்னிடம் மிகச் சரியான சொல்லாகும். ஏனெனில் நான் ***இரண்டு தடவை ஷ:பான் மாதத்தில் அதனைக் கண்டிருக்கின்றேன்.*** ஒரு தடவை பிறை பதினைந்தில், மற்றொரு தடவை பிறை பத்தொன்பதிலும், இன்னும் இரண்டு தடவை ரமழான் மாதத்தின் நடுப்பத்தில் பிறை பதிமூன்றிலும் பிறை பதினெட்டிலும் கண்டிருக்கின்றேன்.

*அமல்களின் சிறப்பு பக் : 415*

இப்னு அறபியின் பிதற்றல் குர்ஆனோடு மோதுகின்ற, விடயத்துக்கு இதுவொன்றே சான்று. குர்ஆன் இறக்கப்பட்டது ரமழானின் லைலதுல் கத்ர் இரவில் (97:1), (2:185) என அல்-குர்ஆனே வாக்குமூலம் தரும்போது, லைலதுல்கத்ர் இரவை ரமழானின் இறுதிப் பத்தில் தேடிக் கொள்ளுங்கள். என்ற நபிகளாரின் பொன் மொழி தெளிவாக அறிவிக்க. (இப்னு உமர், ஆயிஷா, அபூ ஹுரைறா(ரழி) நூல்:புஹாரி, முஸ்லிம்).

இப்னு அறபி ஷ:பான் மாதத்தில் இருதடவை கண்டிருப்பதாக புருடாவிட ஷகரிய்யா ஷாகிப், ஞானவானின்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றை அப்படியே எழுதி வைத்துள்ளார் நபிகளாருக்கே மறைக்கப்பட்ட 'லைலதுல் கத்ர்' இப்னு அறபிக்கு காட்டப்பட்டுள்ளது. அதுவும் நான்கு தடவை. த.்.லீம் குர்ஆனுக்கு மட்டும், எதிரான புத்தகமல்ல, இறைத் தூதரை அவமானப்படுத்தி, அவரின் அந்தஸ்தை குறைத்து மதிப்பிடக் கூடிய ஒரு புத்தகமுமாகும்.

''கஷ்ப்'' என்ற (ஞான திருஷ்டி) உள்ளவர் உலகில் வாழும் போதே சுவர்க்கம் நரகத்தைக் காணலாம்.

***திக்ரின் சிறப்பு பக், 667***

இந்த நச்சுக் கருத்துக்களை சில உலமாக்களும் இன்பம் ததும்ப வாசித்து வருவதுதான் கண்டிக்கத்தக்க அம்சமாகும்.

அத்துடன் தப்லீக்கின் ஆரம்ப கர்த்தாக்கள், சூபிகளை பூஜித்த தரீக்காவை சார்ந்தவர்களே, என்பதும் புலனாகிறது.

சீடன் அல்லாஹ்வை கண்டு விட்டானாம், எழுபது முறை அல்லாஹ்வை காண்பதை விட, அபூயஜீதை ஒரு எழுபது முறை காண்பது பிரயோசனம், அமல்களின் சிறப்பில் கதையளக்கிறார் ஷகரிய்யா ஷாகிப். ''இந்த அபூயஜீது அல்லாவைக் கண்டாராம், அவர் அல்லாஹ்வைக் கண்டதனால் அவரைக் காண்பது சிறப்பாம்.'' ''பூமிகள் யாவற்றையும், அதற்குக் கீழ் உள்ளவற்றையும் அல்லாஹ் எனக்குக் காட்டினான். பின்னர் வானங்கள் எல்லாவற்றையும் எனக்கு சுற்றிக்காட்டினான். சொர்க்கங்கள் முதல் அர்ஷ் வரை காட்டினான். பின் அவன் முன்னால் என்னை நிறுத்தி நான் உனக்கு வெகுமதியாகத் தர நீ கண்டவற்றில் எதையேனும் கேள், என்று அல்லாஹ் கூறினானாம்.

***இஹ்யாஉலூமித்தீன். 4/144***

அபூயஜீது அல்லாஹ்வின் அர்ஷ்வரைப் போய் இருக்கிறார். நபி (ஸல்) அவர்களுக்கு மி.்.ராஜ் பயணத்தின் போது வானத்தில் குறிப்பிட்ட பகுதிகளையும் வழியில் சில நபிமார்களையும்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினான். அபூயஜீதுக்கு, பூமியையும் சுற்றிக்காட்டியது போதாமல், அர்ஷுக்கு முன்னாலும் நிற்க வைத்து பேசியிருக்கிறான். இவரைப் போற்றி எழுதும் த்.லீம் கிதாபை படிக்கும் பக்திதான் என்ன?

குர்ஆன் கூறுகிறது ''பார்வைகள் அவனை அடையாது'' **(6:103)**

''எவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவரது இரட்சகனைக் கண்டாரென்று உமக்கு கூறினாரோ அவர் பொய்யுரைத்துவிட்டார்''

***ஆயிஷா (ரழி), முஸ்லீம் கிதாபுல்ஈமான், முஸ்னத், அஹ்மத்***

''உங்களில் எவரும் மரணிப்பதற்கு முன்னால் நிச்சயமாக அல்லாஹ்வைக் காணமுடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள்''

***இப்னு ஸய்யத், முஸ்லிம், நஸாயி***

''உலகில் யாரும் அல்லாஹ்வைக் காணமுடியாது என்பதில் முஸ்லீம்கள் ஏகோபித்து இருக்கிறார்கள்''.

***இமாம். அல் காழீ அபூல் இஸ்ஸி அத்திமஷ்கீ (ரஹ்) ஷரஹ் அகீததுத் தஹாவிய்யா***

''எவன் உலகில் அல்லாஹ்வைக் கண்டதாக, அல்லது காண்பதாக கூறினானோ, அவன் காபிராகி விட்டான், அவன் காபிரே''

***இமாம் அல்-பர்பஹாரி (ரஹ்) கிதாபு ஷரஹிஸ்ஸுன்னா.***

''அல்லாஹ்வை பார்த்துக் கொண்டிருந்த பைத்தியகாரரின் கதை, ''ஷிப்லீ என்ற பெரியார் அல்லாஹ்வை பார்த்துப் பேசியதாகவும், அவர் பாடிய கவிதைகளையும் த்.லீமில் பார்க்கலாம்.

***திக்ரின் சிறப்பு பக்: 802***

மும்ஷாத் தீனுவரி என்பவர் முப்பதாண்டுகளாக அல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்க்கத்தைக் காட்டியும் ஒரு தடவையேனும் ஏறெடுத்துப் பார்க்காமல் அல்லாஹ்வையே பார்த்துக் கொண்டிருந்தாராம்.

***திக்ரின் சிறப்பு பக்: 803***

40 நாட்கள் இஷாவுக்குச் செய்த வுழுவுடன் ஸுபஹுத் தொழுத பெரியார், இவர் இரவில் தூங்குவதுமில்லை.

***அமல்களின் சிறப்பு பக்: 119***

செய்கு மழ்ஹர் ஸஹ்தி என்பவர் அறுபது ஆண்டுகள் பயபக்தியினால் அழுது கொண்டேயிருந்தாராம்.

***அமல்களின் சிறப்பு பக் : 119***

ஒரு நாள் இரண்டு நாள் அல்ல அறுபது ஆண்டுகள் அழுதால் ஒரு மனிதனின் நிலை என்னவாகும் என்பதையாவது இதை வாசிப்பவர்கள் சிந்திக்க வேண்டாமா?

இரவு வணக்கம் புரியாமல் தூங்கிய பெரியார்களின் கனவிளெல்லாம் அழகிய பெண்கள் வந்து கிளுகிளுப் பூட்டும் பேரின்ப கீதங்களை பாடியதுடன் நின்று விடாமல் கவிதைகளையும் கையில் திணித்து விட்டுப் போனதாக தஃலீமில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தப் பெரியார்கள் எல்லாம் துறவரம் என்ற பெயரில் நாடகமாடி பெண் சுகத்திற்கு ஏங்கியவர்கள் என தஃலீம் சித்தரிக்கின்றது.

***அமல்களின் சிறப்பு பக் : 118-121***

சப்பாணிப் பெண் அயல் வீட்டுக்கு வந்த வாலிபனின் பொருட்டால் துஆக் கேட்டாளாம், கால் சரியாகி விட்டதாம்.

***அமல்களின் சிறப்பு பக் : 124***

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பொருட்டாலே துஆ, வசீலா கேட்பதற்கு அல்லாஹ் அனுமதி வழங்காத போது வாலிபனின் பொருட்டால் கராமத் நடந்ததாக தஃலீம் கதையளக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் வம்சத்தைச் சேர்ந்த ஒரு பெரியார் 15 ஆண்டுகள் உறங்காமல் ஒரே வுழுவில் 12 நாட்கள் எல்லாத் தொழுகையையும் தொழுதாராம். அதுவும் 10 நாட்கள் எதுவும் சாப்பிடாமலும் இருந்தாராம்.

***அமல்களின் சிறப்பு பக் : 126***

இதை சுப்ஹானல்லாஹ் போட்டு தாடியை உருவி தலையை ஆட்டி வாசித்து கதை கேட்கும் பக்திதான் என்ன?

கப்ரில் தொழுத பெரியாரின் கதை

***அமல்களின் சிறப்பு பக் : 129***

அதுவும் அமல்களுக்கு கூலி வழங்கப்பட்டு, சுவர்க்கம் நரகம் தீர்மானிக்கப்படும் மண்ணறையில் ஒருவர் நின்று தொழுதார் என்றால், தொழுகையில் எனது கண்குளிர்ச்சி இருக்கின்றது என்ற நபிகளாருக்கே இந்த சலுகை வழங்கப்படவில்லை. இவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று த..லீம் சொல்கிறது. நபிகளாரை இழிவுபடுத்துகிறது.

மக்கத்தில் எழுபது ஆண்டுகள் இடை விடாது தொழுத ஒருவரின் கதையில் குடும்பம், உழைப்பு, சமுகவேளை, எதுவுமின்றி சதா இறைவணக்கத்தில் திளைத்திருந்ததாக ஸகரிய்யா ஸாஹிப் கதை விடுகிறார்.

***அமல்களின் சிறப்பு பக் : 139***

பெரியார்களின் பெயரில் மட்டுமல்ல மதிப்புக்குரிய இமாம்களின் பெயராலும் ***(பக் : 132-133)*** இதை விட கொடுமையான கற்பனைக் கதைகளை அவிழ்த்துவிட்டு மார்க்க மாக்கியிருக்கின்றார்.

உவைசுல் கர்னி என்பவர் இரவில் தொழுவார், ருகூஉ செய்வார் இரவு முழுவதும் அப்படியே ருகூஉவில் இருந்து விடுவாராம்.

***அமல்களின் சிறப்பு பக் : 161***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்களின் மலம், சிறுநீர், இரத்தம் அனைத்தும் பரிசுத்தமாகும் எனவே அதை சாப்பிடுவது குடிப்பது என்பதால் எவ்விதமான கேள்விக்கும் இடமில்லை.

**அமல்களின் சிறப்பு (ஸஹாபாக்கள் வரலாறு பக்.1198)**

இவ்வாறே திக்ரிக் சிறப்பில் இதை விட அபாண்டமான கதைகளையும் குர்ஆனுக்கு வேட்டு வைக்கும் கருத்துக்களையும் பார்க்கலாம். விரிவை அஞ்சி ஒரு சில உதாரணங்களையும், கதைகளையுமே குறிப்பிட்டுள்ளேன்.

மிகத் தெளிவான குர்ஆன் ஹதீஸ்; இமாம்களின் கருத்துக்களை உதாசீனப் படுத்திவிட்டு, தான் தோன்றித்தனமாக, திக்ரின் சிறப்பில் சூபியாக்கள் அல்லாஹ்வைக் கண்டு, சம்பாஷித்ததாக ஷகரிய்யா ஷாகிப் எழுதி வைத்துள்ளார். அமல்களின் சிறப்பில் திக்ரின் சிறப்பை வாசித்துப் பாருங்கள்.

இஸ்லாமிய அகீதாவுக்கே வேட்டு வைக்கக் கூடிய நச்சுக் கருத்துக்களையும், வஹ்ஜதுல் வுஜுத், (எல்லாம் அல்லாஹ்) கொள்கையையும் ஆதரித்து எழுதப்பட்டிருப்பதை நிதர்சனமாகக் காணலாம். இந்த உண்மையை விளங்கிக் கொள்ளாத தப்லீக் ஜமாஅத்து உறுப்பினர்கள் இந்த தஃலீமை பக்குமாக வாசித்து வருகின்றனர்.

இதுபோன்ற அநேக சம்பவங்கள் குர்ஆனுக்கு எதிராக எழுதப்பட்டுள்ளது. பெரியார் கண்ட கனவுகள், கறாமத்துகள், என்ற பெயரால் போலி ஷைகுமார்கள் நிகழ்த்திய கண்கட்டு மாயஜால வித்தைகள், இந்து மதத்தத்துவங்கள், சூபித்துவ ஷீஆக் கருத்துக்கள் அனைத்தையும் இஸ்லாமியக் கொள்கையென நிருபிக்க ஷகரிய்யா ஷாகிப் அரும் பாடுபட்டிருக்கிறார், ஷைகுல் ஹதீஸ்க்கு, திக்ரின் சிறப்புகள், அமல்களின் சிறப்புகள் சொல்ல ஷஹீஹான ஹதீஸ்கள் கிடைக்கவில்லையா?

''ஒருதடவை உமர் (ரழி) அவர்கள் தனக்குக் கிடைத்த தவ்ராத் வேதத்தின் பிரதி ஒன்றை வாசித்துக் காட்டி அதிலுள்ள நல்ல விஷயங்களை பாராட்டுவது போல் நடந்து கொண்டார். ரசூல் (ஸல்) அவர்கள் மிகுந்த கோபமுற்று ''என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக, மூஸா (அலை) அவர்கள் உங்களிடத்தில் வந்து என்னை விட்டு அவரை நீங்கள் பின்பற்றினால், நேர்வழியை விட்டும் நீங்கள் வழி தவறி விடுவீர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உயிரோடு இருந்திருந்து எனது காலத்தையும் அடைந்திருந்தால் என்னைப் பின்பற்றி இருப்பார், எனக் கூறினார்கள்.

*இப்னு அபீ ஆஸிம்*
*ஸுன்னதுத் தாரமீ, அஹ்மத்*

அருள்மறை குர்ஆன் வழிகாட்டியாக நம்வசமிருக்க, இறைவனால் அருளப்பட்ட ஒருவேதத்தின் பகுதியைக் கூட, வாசித்து நல்லதென்று மெச்சுவதற்கு நபியவர்கள் தடுத்துள்ளார்கள். என்றால் இந்த நூற்றாண்டில் ஒரு மனிதரால் கற்பனையும், பொய்யும் கலந்து எழுதப்பட்ட த..லீமை வழிகாட்டியாக எடுத்துக்கொண்டு செயற்படுவோரின் நிலை என்னவாக இருக்கும் சிந்தியுங்கள். அல்லாஹ்வுக்கு மட்டும் சொந்தமான பண்புகள், பெரியார்களிடமும் இருக்கிறது, என த..லீம் நிருபிக்கிறது.

நபிமார்களுக்கு மட்டும் வழங்கியிருந்த சிறப்புகளை ஒரு திக்ரின் மூலம் சூபிகளுக்கு பரிசளித்திருப்பதாக பிதற்றுகிறது.

த..லீம் புத்தகத்தில் 200க்கு மேறப்பட்ட பிழைகள் உள்ளதென சுட்டிக்காட்டி ஏப்ரல் 1988 அந்நஜாத் என்ற இஸ்லாமிய சஞ்சிகை ஆசிரியர், ஹஜ்ரத் ஜீ அவர்களுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார்கள். அதற்கு எவ்வித பதிலையும் தப்லீக்கின் ஹஸ்ரத் ' ஜீ ' யால் தரமுடியவில்லை. அக் கடிதத்தின் சிலபகுதிகள்.

''வழிகேட்டிலிருந்து தப்லீக் பணியால் மீட்கப்பட்டவர்கள்தாம் உண்மை இஸ்லாத்தை பின்பற்றி வாழ்கிறோம் என்று கருதுகிறார்கள், ஆனால் அந்தோ, அவர்களுக்கு ஊட்டப்பட்டவை அல் குர்ஆன் ஹதீது இவைகளின் அடிப்படையில் உருவாகாத தவறான கருத்துக்களும், நோக்கங்களுமே ஆகும். இது உண்மையில் அமைய வேண்டுவதற்கு மாறாக உள்ளது. அவர்கள் நம்பியுள்ள கோட்பாடுகளும், நோக்கங்களும் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை. தப்லீக் - த..லீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹல்காக்களில் வாசிக்கப்படும் கருத்துக்களில் பெரும்பாலானவை குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் முற்றிலும் முரண் ஆனவை.

எனவே தப்லீக் ஜமாஅத் கற்பித்த வழிகளின் படி செயல்படுபவர்களின் அமல்கள் இஸ்லாமிய ரீதியில் இல்லாமல் இருப்பதால் மற்ற முஸ்லீம்களையோ, இதர மதத்தினரையோ கவருவதில்லை. மாறாக மாற்று மதத்தினரிடையே இஸ்லாத்தைப் பற்றிய தவறான கருத்துக்கள் உருவாக காரணமாகின்றன. மற்ற மதங்களின் கொள்கைகளுக்கேற்ப சமுதாய பிரச்சினைகளில் ஈடுபாடு இல்லாமல் இருந்தால் மாத்திரமே, (சூபித்துவத்தைப் பின்பற்றி) இறை வழிபாடு பூரணமாக நிறைவேற்றப்படவியலும் என்ற கருத்துக்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

பல வருஷங்களாக தப்லீக் உலகெங்கும் செயற்பட்டு வந்தபோதிலும் பொதுவாக மற்ற மதத்தினரை இஸ்லாத்தின் பால் ஈர்க்கத்தவறி விட்டது. எனவே த்.:லீம் ஹல்காக்களில் வாசிக்கப்படும் நூற்கள் மாற்றப்பட்டு குர்ஆன் - ஹதீதுகளின் போதனைகள் மட்டும் உள்ளடங்கியதாக வைக்கப்பட வேண்டும்.

நாங்கள் இங்கே எடுத்துரைப்பவைகள் தீர ஆராயமல் மேல் எழுந்த வாரியாக எழுதப்பட்டவைகள் அல்ல. பல வருஷங்களாக பணியில் ஈடுபட்டோம். இஸ்லாத்தின் மறுமலர்ச்சியைக் காணும் ஆவலில் உண்மையான அறிவைத் தேட முனைந்தோம். கல்வியாளர்களோடு கலந்து ஆலோசித்தோம். த்.:லீம் நூற்களில் பரவலாக ஊடுருவி விட்ட குறைகளைக் கண்டோம்.

தப்லீக் ஜமாஅத் அதனை உருவகப்படுத்திய மவ்லானா இல்யாஸ் (ரஹ்) அவர்கள் விரும்பிய படி அதன் தூயவடிவில் நிறைவான நிலையில் செயல்பட வேண்டும் என்ற ஆர்வமே எங்களை எழுதத் தூண்டியது.

***அந்நஜாத் ஏப்ரல் 1988 பக்: 29***

இது தவிர இந்திய உயர்நீதிமன்றம் தப்லீக் கிதாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலில் வாசிக்கப்படுவது இஸ்லாத்திற்கு முரணானதெனப் பிரகடனம் செய்துள்ளது.

''மேன்மை தங்கிய ''**நீதிபதி R.B.** பல்கங்காதர்'' தனது தீர்ப்பில் இவ்வாறு பிரகடனம் செய்துள்ளார்.

திருக்குர்ஆனின் பல மொழி பெயர்ப்புக்களை கவனமாகப் படித்துப் பார்ப்பதன் மூலம் மாத்திரமின்றி, இஸ்லாமிய தீர்க்கதரிசியின் ஹதீஸ்களிலிருந்து இஸ்லாமிய தீர்க்கதரிசி (ஸல்) அவர்களின் மேலான சிரேஷ்ட அந்தஸ்திலிருந்தும் நான் பின்வரும் தீர்ப்புக்கு வந்துள்ளேன்.

> த..லீம், உர்து மொழி, அரபி, பாரசீகம் ஏனைய இந்திய மொழிகளினால் தொகுக்கப்பட்டதொன்றாதலின், குர்ஆனையும், அஹாரிதத்களையும் சரியான குறிப்புகளுக்கேற்ப மொழி பெயர்ப்பதற்கு உலமாக்களுக்கு பெரிதும் உதவியாயுள்ளது. ஆயின் துரதிஷ்டவசமாக மொழி பெயர்ப்பில் முரண்பாடு காணப்படுகிறது.
>
> தப்லீக் ஜமாஅத் இந்த சகாப்தத்தின் ஒரு சிருஷ்யாதலின் அது முஸ்லிம் பொதுஜன சமுதாயத்தின் நம்பிக்கைகளுக்கும் மனவுறுத்தலுக்கும் உரியதாக இல்லை. எனபது வாக்கு மூலங்கள் சாட்சிகளின் படி தெளிவாகத் தெரிகிறது.
>
> குறித்த தப்லிக்கின் நூல்கள் முஸ்லீம்களுடைய அடிப்படைக் கொள்கைகளில் சந்தேகத்தையும், பிளவையும், ஏற்படுத்தும், மூல காரணியாகவும், மேலும் அவை முஸ்லீம்களிடையே, வேறுபாடும், வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படுவதாலும் தப்லீக் நூற்கள் வாசிப்பதைத் தடை செய்கிறேன்.

'தப்லீக் நிஸாப்' என்னும் நூல் உண்மையில் தெய்வீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பு அல்ல. அது எத்தனையோ பல முரண்பாடுகளையும், தவறான மொழி பெயர்ப்புகளையும் உடையது.

இவ்வழக்கின் தீர்மானம் தென்னிந்தியாவில் கர்நாடக ராச்சியத்தின் பல்காம் உயர் நீதிமன்றத்தில் 1986 ஜனவரி 13ம் திகதி, வழங்கப்பட்டது. சிம்மாசனம் ஏறிய நீதிபதி R.B. பல்கங்காதர்.

**நன்றி : நவ-1986- பெப்- முஸ்லிம் டைஜஸ்ட் : பக்-47**

தப்லீக்கின் ஆரம்ப காலத்தில் ஸஹாபாக்கள் சரிதை, ரியாலுஸ்ஸாலிஹீன், போன்ற ஆதார பூர்வமான நூற்களே த.்.லீமில் வாசிக்கப்பட்டன. அறபு நாட்டு தப்லீக் ஜமாஅத்தினர் இன்றளவும் இந்நூற்க்களையே வாசித்து வருகின்றனர். இன்றைய ஷகரிய்யா ஷாகிபின் த.்.லீமை அறபியில் மொழி பெயர்த்து அவர்களுக்கு கொடுத்தால் தப்லீக் ஜமாஅத்தை விட்டும் வெகுதூரம் விரண்டோடி தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள்.

எத்தனையோ இமாம்கள் தங்கள் கூற்றுக்களில் தவறு இருக்கிறது என நிரூபித்தால், அவற்றை திருத்திக் கொண்டதுடன் மட்டும் நின்று விடாமல், அவைகளை புறக்கணித்து விடும் படியும் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

''எந்த ஆதாரத்தின் அடிப்படையில் நாம் முடிவுசெய்தோம்'' என்பதை அறியாமல், எங்கள் சொல்லை எடுத்து நடப்பது எவருக்கும் ஹலால் இல்லை.

***இமாம். அபூ- ஹனீபா (ரஹ்)***
***ரஸ்முல் மு.்.ப்தி.***

எனது முடிவுகளை நீங்கள் ஆராய்ந்து குர்ஆனுக்கும் நபி வழிக்கும் பொருத்தமானவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் பொருத்தமில்லாதவற்றை விட்டுவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இமாம் மாலிக் ரஹ்*
*உஸூலுல் அஹ்காம் 294/6*

எனது நூலில் நபி (ஸல்)அவர்களின் வழிமுறைக்கு மாற்றமானதைக் கண்டால், எனது கூற்றை விட்டு விட்டு, நபி (ஸல்)அவர்களின் வழிமுறையைப் பின்பற்றுங்கள்,

*இமாம் ஷாபியீ (ரஹ்)*
*அல், மஜ்மூ: 63/1*

''உண்மையான ஆதாரம் நபித்தோழர்களிடம் உள்ள ஹதீஸ்களில் தான் உள்ளது.''

*இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்*
*ஜாமிஉ இப்னு அப்தில் பர்:149/1*

தப்லீக் அன்பர்களே உங்கள் சேவையும்,தொண்டும், தியாகமும் மகத்தானதுதான் அதை யாரும் மறுக்கவில்லை, பரிகாசிக்கவுமில்லை. நீங்கள் மனிதர்களை தொழுகைக்கு அழைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். அதில் வெற்றியும் கண்டுள்ளீர்கள். அதை குறைத்து மதிப்பிடவும் இல்லை. நீங்கள் புனிதமாகக் கருதி அல்லும் பகலும் வாசித்து வரும் தஃலீம் புத்தகத்தின் யதார்த்த நிலையை தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

கண்ணியத்துக்குறிய இமாம்கள் கூட, தம் வார்த்தைகளில் பிழை இருப்பின் அதை நிராகரித்து விட்டு, நபி வழியையும் இறை வேதத்தையும் பின்பற்றும் படி கூறி விட்டார்கள். குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் எதிரான கருத்துக்களையே தாரக மந்திரமாகக் கொண்டு எழுதப்பட்ட தஃலீம் இனியும் தேவைதானா? மேலே சுட்டிக்காட்டி நிரூபித்த சான்றுகள் உங்கள் சிந்தனையை தூண்டட்டும். தஃலீமை குர்ஆனின் ஒளியில் மாற்றி அமையுங்கள்.

அல்-குர்ஆனை மக்கள் விளங்கக் கூடாது என்பதற்காக எகிப்திய மக்களுக்கு பாடத்திட்டம் அமைத்தவர் பிரித்தானியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனின் கருத்துக்களை சிதைத்து தீனே இலாஹி என்ற *புதிய மதத்தை தோற்றுவித்தவர் அக்பர் சக்கரவர்த்தி.* இதே பாணியில் குர்ஆனுக்கு நிகராக த..லீம் எழுதப்பட்டுள்ளது. என்ற வரலாற்றுக் குற்றச்சாட்டிலிருந்து தப்லீக் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முனைய வேண்டும்.

''மனிதர்களே சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எளிதாக்கி இருக்கின்றோம் ஆகவே (இதைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?இப்படி என்னற்ற இறை வசனங்களும் நபிமொழிகளும் குர்ஆன் வழி நடக்க வேண்டுமென வற்புறுத்துகின்றது.

''அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுக்களில் அவனுடைய நாமத்தைச் சொல்வதைத் தடுத்து, அவற்றைப் பாழாக்க முயற்சிப்பவனை விட மகா அக்கிரமக்காரன் யார்? 2:114

என்ற வசனத்தை கவனத்திற் கொண்டு செயற்படுங்கள், த..லீமுக்குப் பதிலாக, குர்ஆன் வாசிக்கப்பட்டால், அதைக் குழப்பியடித்து அக்கிரமக்காரர்களாக ஆகிவிடாதீர்கள்.

ஹஜ்ரத் ஜீ மவ்லான யூசுப் அவர்கள் எங்களுக்குச் சொன்னது என்னவென்றால் முஸ்லிம்கள் மத்தியிலுள்ள இயக்கங்கள் இஸ்லாத்திற்கு அல்லது முஸ்லிம்களுக்கு ஏதோ ஒரு வகையால் சேவை செய்கின்றனர். அவர்களது சேவைகளை நாம் மதித்து நடக்க வேண்டும் .எங்களது நிகழ்ச்சி ஒன்றும் அவர்களது நிகழ்ச்சி ஒன்றும் ஒரே நேரத்தில் நடந்தால் அவர்களுக்காக நாங்கள் விட்டுக்கொடுத்து எங்களது நிகழ்ச்சியை மாற்றிக்கொள்ள வேண்டும், மற்றவர்களின் நிகழ்ச்சிகளில் நாமும் கலந்து கொள்ள வேண்டும். .

இந்த 'நஸீஹத்தின் அடிப்படையில் தப்லீக் குறைந்த பட்சம் தன்னை சீர்திருத்தம் செய்ய முன்வருமானால், எவ்வளவோ மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி தீனுடைய வேலைக்காக இரண்டரை மணிநேரம் ஒதுக்குவது ஆரம்பத்தில் இருக்க வில்லை. 1973 ஆண்டு இஜ்திமா, ஏற்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தப் பழக்கம் இன்றுவரை ஓர் உசூலாக பின்பற்றப்படுகிறது, ஹல்கா த∴லீமிலும், தஷ்கீலிலும் மாற்றம் செய்யப்படுள்ளது. இவையெல்லாம் மாறிவரும் காலத்தின் குறிப்பறிந்து மாற்றமுடியுமெனில், நமது ஈமானின் அடிப்படையை, தௌஹீதின் அடித்தளத்தை தகர்த்து வீசும் த∴லீம் புத்தகத்தை ஏன் மாற்ற முடியாது.

''நபியவர்கள் கூட அவர்களைப்பற்றி கூறும்போது,மார்க்க விசயத்தில் நான் ஒன்றைக் கூறினால் எனக்குக் கட்டுப்பட்டு நடவுங்கள். எனது அபிப்பிராயத்தில் நான் ஒன்றைக் கூறினால் நானும் ஒருமனிதனே என்று கூறினார்கள்.

*(முஸ்லிம்)*

நபியவர்களின் இக்கூற்றை ஆராய்ந்து செயற்படுங்கள். ''நான் இரண்டு விஷயங்களை உங்களிடம் விட்டுச் செல்கிறேன், அவற்றை பின்பற்றி நடக்கும் காலமெல்லாம் ஒருபோதும் வழிதவர மாட்டீர்கள் அவை அல்லாஹ் வின் வேதமும், எனது நடைமுறையுமாகும்.

***இப்னு அப்பாஸ் (ரலி)***
***அஹ்மத் - ஹாகிம்.***

இவ்வளவு தெளிவாக திருக்குர்ஆனும், நபி வழியும் விளக்கப்பட்டதின் பின்னரும் த∴லீம்தான் எங்கள் வழிகாட்டி, அதில் ஓர் அட்சரமேனும் மாற்றமுடியாது, என அடம்பிடிக்கும் தப்லீக் ஜமாஅத் தினர்கள் அல்லாஹ் வுக் கெதிராகவும், நபிகளாருக்கெதிராகவும் போராடத் துணிந்து விட்டார்கள் என்றுதான் அர்த்தம்.

ஆதாரபூர்வமான நபிவழிகளைப் புறக்கனித்துவிட்டு, வெறும் ஊகங்களைப் பின்பற்றி சீரழியும் தப்லீக்கின் பாமரர்களை விட,இறை வேதத்தை கற்றுணர்ந்து, அதன் போதனைகளை மழுங்கடிக்கும் தப்லீக் உலமாக்கள் தான் இறைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவர்களாக இருக்கின்றார்கள். அருள்மறைக் குர்ஆனையும் மாநபியின் போதனையையும் மூலதனமாகக் கொண்டு செயற்படும் சகோதர இயக்கங்களை சிறுபிள்ளைகள், அறிவிலிகள், வஹ்ஹாபிகள், என்றெல்லாம் கூச்சலிடுவது என்ன நியாயம். இதைத்தானே அன்றைய மக்காவாசிகளும் கூறினார்கள்.

ஹுது நபியவர்கள் ஆது சமூகத்திற்கு இறை அழைப்பை எத்தி வைத்த போது..... ''அவருடைய சமூகத்தாரில் நிராகரித்தவர்களின் தலைவர்கள் நிச்சயமாக நாங்கள் உம்மை மடமையில் மூழ்கியவராகவே காண்கிறோம். மேலும், உம்மைப் பொய்யர்களில் ஒருவராகவும் கருதுகிறோம். (7:66) எனக் கூறினார்கள்.

எனவே இறை வேதத்தை ஓதிக்காட்டுபவன், விளக்கமுறப்படுபவன் மக்களுக்கு அதன் அகமியத்தை சொல்ல விழைபவனை தப்லீக் அன்பர்கள் இப்படித்தானே குறிப்பிடுகின்றனர். முடிவாக த:லீம்-திருக் குர்ஆன் இரண்டையும் ஒப்பு நோக்குமிடத்து பின்வரும் தீர்மானத்திற்கு வரமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திருக் குர்ஆன் | த:.லீம் |
|---|---|
| ஜிப்ரயீல் மூலம், அல்லாஹ்விடமிருந்து முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ரமழான் மாதம் லைலதுல் கத்ர் இரவில் அருளப்பட்டது. | ஷகரிய்யா ஸாகிப் என்பவரால் உர்து மொழியில் எழுதப்பட்ட ''தப்லீக் நிஸாம்'' என்ற புத்தகம் கே.ஏ நிஜாமுத்தீன் என்பரால் ''அமல்கலின் சிறப்பு'' என இரு பாகங்களாக வெளியிடப்பட்டது. |
| எல்லாக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய அனைத்து பிரச்சினைகளுக்குமான தீர்வை குர்ஆன் சொல்கிறது. | வெறும் அமல்களின் சிறப்பு இட்டுக் கட்டப்பட்ட ஹதீதுகளும் கதைகளும் உள்ள தொகுப்பு. |
| ஓதினால் நன்மை - மறுமையில் சிபாரிசு உள அமைதி. | படித்தால் நன்மையென சொல்ல முடியாது. ஒரு முஸ்லீம் படிக்கும்போது அவனது அக்'தாவை சீர்குலைக்கிறது. |
| உலகப்பொது மறை அனைத்து சமுதாயங்களுக்குமான வழிகாட்டி. | தப்லீக்கின் உறுப்பினர்களுக்கு மட்டும் பொருந்தக் கூடியது. |
| தவறுகள் பிழைகள் இல்லாதது. | ஆயிரக்கணக்கான தவறுகள் கட்டுக் கதைகளைக் கொண்டது. |
| ஓத ஓத இறை விசுவாசத்தை அதிகரிக்கும். | படிக்கப்படிக்க பெரியார்கள் சூபிகளின் வழியை நம்பி இறை விசுவாசத்தை இழக்கச் செய்யும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திருக் குர்ஆன் | த.:.லீம் |
|---|---|
| குர்ஆன் விளங்கவும், மனனமிடவும் இலகு. | மனனமிடவோ விளங்கிச் செயற்படவோ இயலாது. |
| குர்ஆன் மனித சமூகத்தை நோக்கி தன்பால் வருமாறு அழைப்பு விடுக்கிறது. | த.:.லீம் குர்ஆனை அணுக முடியாதவாறு திணிக்கப்பட்டுள்ளது. |
| குர்ஆன் இறைவனின் வேதம் வஹி மூலம் அருளப்பட்டது. | ஷகரிய்யா சாஹிபின் பல்சுவைதிரட்டு, மொழி மாற்றம் செய்யப்பட்டது. |
| குர்ஆன் தன்னை சிறந்த இறை வேதமாகவும் விளங்கிக் கொள்ளல் இலகுவானதென்றும் போதிக்கிறது. | குர்ஆனை விளங்க பதினைந்து கலைகள் தேவையென அச்சுறுத்தி குர்ஆனை நெருங்க விடாமல் தடுக்கிறது. |
| இணைவைத்தல், குப்ர், ஷிர்க், நிராகரித்தலை விலக்கி, தௌஹீதின் பக்கம் அழைக்கிறது. | பெரியார்கள் சூபிகள், மகான்கள், இவர்களின் பெயரால் கறாமத்துகளை கட்டவிழ்த்து ஷிர்க்கை ஆதரித்து ஊக்கம் அளிக்கின்றது. |
| மறைமுகமானதையும் எதிர்கால ஞானத்தையும் அல்லாஹ் ஒருவனே அறிந்தவன் என குர்ஆன் கூறுகிறது. | மறைமுகமானதும், எதிர்கால ஞானமும் ஞானவான்களுக்கும், பெரியோர்களுக்கும் துலாம்பரமாகும் என த.:.லீம் சொல்கிறது. |
| சொர்க்கம் நரகம் நன்மை தீமை அமல்களுக்குரிய கூலி, மறுமையில்தான் தரப்படும், அவற்றை இவ்வுலகில் (சொர்க்கம், நரகம்) காணமுடியாது. | சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதும், கனவிலும், திக்ரில் நிலைத்திருக்கும் போதும், சுவர்க்கம் நரகம் காட்டப்பட்டதாக த.:.லீம் கதையளக்கிறது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இலக்கியம், விஞ்ஞானம், புவியியல், வானவியல், கடல், உள்ளிட்ட, குடும்ப சமூகப் பெறுமானங்களையும், சர்வதேச விவகாரங்கள் உள்ளிட்ட மருத்துவ கண்டு பிடிப்புகளையும் ஆராய்ந்து முடிவெடுக்க குர்ஆன் வழிகாட்டுகிறது. | ''பளாயிழ்கள்'' சிறப்புகளை மட்டும் கற்பனை கலந்து மார்க்கத்தை கடைச் சரக்காக மாற்றியுள்ளது. |
| ஓத-ஓத இனிமையும், அற்புதமும் நிறைந்தது. | படிக்கப் படிக்க அலுப்பும் சலிப்பும் ஏற்படுத்த வல்லது. |
| அறிவைத் தேடிக் கற்கும் படி வற்புறுத்துவதுடன் அறிஞர்களுடன் உறவைப் பேணிவரும் படியும் கூறுகிறது. | ஸகரிய்யா ஸாஹிபின் இத்தொகுப்பை மட்டும் படிப்பவரே அறிஞர் என்ற மனப் பிரமையை ஏற்படுத்தியுள்ளது. |
| வாழ்க்கையை வணக்கமாக மாற்றும் படி ஏவுகிறது. | வாழ்க்கையை மதம் இபாதத் என கூறு போடுகிறது. |
| சமூக வாழ்வை போதித்து மறுமலர்ச்சியை ஏற்படுத்த ஏவுகிறது | துறவறத்தை ஆதரித்துப் போற்றுகிறது |
| அல்லாஹ்வின் தீனை விளங்கி அதைப்படிக்க குர்ஆன் பிறருக்கு வழிகாட்டியாக உள்ளது. | இஸ்லாத்தை படிக்க முற்படும் ஒருவனுக்கு தீராத குழப்பத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி பகுத்துக்கொண்டு போனால், த∴லீம் குர்ஆனுக்கு எதிரான புத்தகம் என்பது மிகத்துலாம்பரமான உண்மை என்பதை அவதானிக்கலாம், சிந்தித்து நல்லுணர்ச்சி பெறும் தப்லீக் அன்பர்களுக்கு இது போதும், ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுபதம் போல், சில தவறுகள் மட்டுமே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. விரிவஞ்சி, ஏனையவை வாசகர் தேடலுக்காக தவிர்க்கப்படுகிறது.

### *''தப்லீக் ஜமாஅத்தும், வஹ்ஹாபிஸமும், மற்றும் ஜமாஅதே இஸ்லாமி ''பூச்சாண்டியும்''*

இனி தப்லீக் ஜமாஅத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள், சகோதர, இயக்கங்களுக்கும், சத்தியம் ஓங்க குரல் கொடுக்கும் சகோதரர்களுக்கும் எதிராக பிரச்சாரப்படுத்தும் 'வஹ்ஹாபிஸம்' பற்றிய தெளிவைப் பெறுவது அவசியமெனக் கருதுகின்றேன்.

தமது இயக்கத்திற்கு ஒத்துவராத ஆதரவற்ற சகோதர இயக்க உறுப்பினர்களை ''ஜமாஅத்தே இஸ்லாமி'' வஹ்ஹாபிகள் என அடையாளப்படுத்தி, ஓரங்கட்டுவதில் தப்லீக் உறுப்பினர்களிற் பெரும்பாலானோர் மும்முரமாய் முனைப்புடன் செயற்படுவது கண்கூடு.

இது இஸ்லாமிய வரலாறு தெரியாத அறியாமையும் அறபு மொழி புரியாத குழப்பத்தினாலுமே ஏற்படுகிறது. இஸ்லாத்தை அதன் தூயவடிவில் விளங்கிக் கொள்ளாததும் வேர்க் காரணமாகும்.

இந்தப் பெயர் ஒரு தீண்டத் தகாததாகவும், இக்கொள்கையை (குர்ஆன் - ஹதீஸ் அடிப்படையிலான) சார்ந்தவர்கள் இஸ்லாத்தை விட்டும் தடம் புரண்ட வழி கெட்டவர்கள் என்ற மாயையும் பாமர மக்களுக்கு மத்தியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

''ஜமாஅதே இஸ்லாமி'' என்றால் ஓர் இஸ்லாமியக் கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அமைப்பு என்ற நேரடி மொழி பெயர்ப்பைத் தருகிறது. தப்லீக் ஜமாஅத் என்றால் (தீனை) எத்திவைக்கும் ஒரு கூட்டம் என்ற பொருளைத் தருகிறது. வஹ்ஹாப்: அல்லாஹ்வுடைய திருநாமங்களில் ஒன்று அளவில்லாத கொடையாளன் என்று அர்த்தம்.

வஹ்ஹாபி என்றால் (கொடை வள்ளல்) அல்லாஹ்வைச் சார்ந்தவன், என்ற அர்தத்தைத் தருகிறது. (வேறு தவரான அர்த்தம் இதற்கு இருப்பதெனக் கருதுபவர்கள் அகராதி ஆதாரத்துடன் விளக்கலாம்)

ஜமாஅத்தே இஸ்லாமியின் ஸ்தாபகர் மௌலானா அபுல் அ..லா மௌதூதி (ரஹ்), தப்லீக் ஜமாஅத் ஸ்தாபகர் மௌலானா இல்யாஸ் (ரஹ்) போன்று ''வஹ்ஹாபிகள்'' எனப்படுவோர், முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப்''(ரஹ்) அவர்களின் பிரச்சாரத்தால் கவரப்பட்டு, குர்ஆன் ஹதீதை மட்டும் தூய்மையாக பின்பற்றியவர்கள. இவர்கள் அப்துல் வஹ்ஹாப் அவர்களைக்கூட கண்மூடித்தனமாக தக்லீது செய்வதில்லை என்பது இங்கு விஷேடமாக நோக்கற்பாலது.

1924வரை உலக வல்லரசாகவும் முஸ்லிம் நாடுகளின் தலைமையாகவும் திகழ்ந்து பெயரளவில் கலீபா முறையை பிரகடனப்படுத்திக் கொண்ட துருக்கியர்களின், பிற்போக்குத் தனமான நிலைக்கெதிராக சவூதியர்கள் செயற்பட்டனர். எனவே துருக்கியர் சில போலி உலமாக்களின் உதவியுடன் சவூதியருக்கு எதிராக ''வஹ்ஹாபிஸம்''என்ற வார்த்தையை முன்னிறுத்தி, அதை ஒரு பயங்கர செயற்பாடாக பிரச்சாரப்படுத்தி வந்தனர். (துருக்கியில் இணைவைத்தல், கபுறுவணக்கம் அனாச்சாரம் மலிந்திருந்த காலம்)

முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ஹி 1115 கி.பி 1703) அரேபிய தீபகற்பத்தில் நஜ்த் பிரதேசத்தில் 'அயீனஹ்' என்ற இடத்தில் பிறந்தவர். இஸ்லாத்தை ஆழமாகக் கற்று பல் துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர். இவர் வாழ்ந்த காலம் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்க கரமான காலமாகும். மக்கள் இஸ்லாமிய கோட்பாடுகளைத் துறந்து, மனோ இச்சைகளை பின்பற்றிவந்தனர்.

இறந்து போன பெரியார்களின் பெயரால் வஸீலா தேடல், கபுறுவனக்கம், அல்லாஹ் அல்லாதவற்றுக்கு நேர்ச்சை செய்தல், அறுத்துப் பலியிடல், போன்ற அநாச்சாரங்கள் தோன்றி, அது வளர்ந்து வருவதைக் கண்டார்.

மக்கள் மன்றத்தில் உண்மையான நபி வழியை நிலைநாட்டி மங்கிப் போன சுன்னத்துக்களை உயிர்பிக்க கடுமையாக பிரச்சாரம் செய்தார்.இவரின் பிரச்சாரத்தால் கவரப்பட்ட மக்கள், தமது ஷிர்க்கான வணக்கங்களை விட்டு, இவரோடு இணைந்து தாமும் சத்திய இஸ்லாத்தை தூய வடிவில் போதித்து வரலாயினர்.

இக்கால கட்டத்தில் சத்தியத்தை ஏற்கமறுத்து, முன்னோர்களின் கொள்கைகளில் அழுங்குப் பிடியாக இருந்த ''பித்அத்'' வாதிகள். இமாம் அப்துல் வஹ்ஹாபையும், அவரோடு இருந்த குழுவையும் வஹ்ஹாபிகள் (அப்துல் வஹ்ஹாபை சேர்ந்தவர்) என அழைத்து வந்தனர், இதுவே காலப்போக்கில் திரிவடைந்து, உண்மையான தீனை வளர்ப்போருக்கு எதிரான ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வரலாயிற்று.

அசல் குர்ஆனையும் சுன்னாவையும் பின்பற்றுபவர்கள்தான் தப்லீக் அமைப்பினரால் 'வஹ்ஹாபிகள்'என பூச்சாண்டி காட்டப்பட்டு வருகின்றனர். குர்ஆனை விளக்குவதும், விளங்குவதும், ஹதீதை அமுல்படுத்துவதும், அமல் செய்வதும், பித்அத்-ஷிர்க்கை,(கபுறுவணக்கம்,கந்தூரி, கொடியேற்றம், போன்ற அனாச்சாரங்கள்) ஒழிக்கப்படுவதும்,பிரச்சாரம் செய்வதும்,வழிகெட்ட செயலா?

மேற்குறித்த த.்.வாப் பணியை செய்பவர்களுக்கு எதிராக 'வஹ்ஹாபி' பேய்க் காட்டுவது பாமர மக்களை ஏமாற்றும் வித்தைதானே. உண்மையில் வஹ்ஹாபி என்பவன்: குர்ஆன்-ஹதீதை அனுவும் பிசகாமல் ஒழிவு மறைவின்றி, திரித்து புரட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறாமல் உள்ளதை உள்ளபடி சொல்பவன்.

1984, மார்ச்19 தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் தினமனி தினசரியில், +2 வகுப்பிற்கான ''வரலாற்று நவீன உலகம்'' என்ற பாடத்தில் வஹ்ஹாபி என்று அழைக்கப்படுவோர் யார் என்ற கேள்விக்கு, பின்வருமாறு பதில் தரப்பட்டுள்ளது.

***''இஸ்லாமிய மார்க்கத்தை அதன் பழமையான தூயவடிவில் கடைப்பிடிப்போர், அவர்களால் அரேபியர்களிடையே ஒற்றுமை உணர்வு அதிகமாயிற்று''***

**எகிப்திய அறிஞர், அஷ் ஷெய்க் முஹம்மது ஹாமிது அல் பிக்ஹி** கூறுகிறார்: வஹ்ஹாபிய்யா, என்பது ஹி 12ம் நூற்றாண்டின் சீர்திருத்த வாதியான முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் அவர்களின் பிரச்சாரத்தை கூறுவது, அரபி இலக்கணப்படி முறையற்றதாகும். இப்பிரச்சாரத்தை உருவாக்கியவர் முஹம்மது (ஸல்) அவர்கள்தான். எனவே இதற்கு முஹம்மதிய்யா என்று கூறுவதே சரியானதாகும்.

முஹம்மத்(ஸல்) அவர்களின் போதனைகளைத்தான் அப்துல் வஹ்ஹாப், நினைவூட்டி சீர்திருத்தம் செய்தார்களே தவிர, தனது சொந்தக் கருத்தையோ, பெரியார்கள் ஞானவான்கள் கருத்தையோ அல்ல.

***பிரித்தானிய்யா களைக்களஞ்சியம்*** இவ்வாறு கூறுகிறது, ''வஹ்ஹாபிய்யா, என்பது இஸ்லாத்தை தூய்மையாக்குவதில் செயல்பட்டு வந்த ஓர் இயக்கத்தின் பெயராகும்.பெருமானார் முஹம்மது அவர்கள் காட்டிய வழியை மாத்திரமே பின்பற்றுகிறவர்கள், மற்ற எல்லாக் கொள்கைகளையும் விட்டுவிடுகின்றார்கள்,வஹ்ஹாபியத்தின் எதிரிகள் உண்மையான இஸ்லாத்தின் எதிரிகளாவர்கள்.''

இது தவிர, புலுகுல் மராம் விளக்கவுரை சுபுலுஸ்ஸலாம் ஆசிரியர் முஹம்மத் பின் இஸ்மாயில், நைலுல் அல்த்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய முஹம்மத் பின் அலி அஷ் ஷவ்கானி, இராக் நாட்டைச் சேர்ந்த மஹ்மூது சுக்ரி ஆலூசி ''தற்கால இஸ்லாமிய உலகம்'' ஆசிரியர் அமீர் ஷகீப் அர்ஸலான், இமாம் ரஷீதுர் ரிழா,டாக்டர் தாஹா ஹுசைன், போன்ற இஸ்லாமிய அறிஞர்களும் அமெரிக்கா வரலாற்றாசிரியர் ஸ்துடார்டு சீடியோ, வரலாற்றில் அரேபியர்கள் நூலாசிரியர் பர்னாட்லூஸி, கோல்ட்சைஹர், போன்ற மேல் நாட்டு அறிஞர்களும் வஹ்ஹாபியத்து என்பதற்கு இக்கருத்தையே கொண்டுள்ளனர்.

எனவே தப்லீக் அன்பர்கள், வஹ்ஹாபி என்ற வார்த்தையை பயன்படுத்தி தமது அமைப்புக்கு ஒத்து வராத, ஆதரவு தராத சகோதர இயக்க உறுப்பினர்களை, களங்கப்படுத்தாமல், அச்சுறுத்தாமல் இருப்பார்களாக! சுன்னாவை நிலை நிறுத்த பாடுபடும் இவர்களை வஹ்ஹாபி என மட்டம் தட்டுவதற்குறிய காரணம் இதுபற்றிய அறிவீனம் தவிர வேறில்லை.

நோன்புகால 'இப்தார்' நிகழ்சிகளை குழப்புதல்- இது வஹ்ஹாபிகள், ஜமாஅதே இஸ்லாமியர்களின் செயலெனக்கிண்டல் செய்தல், (இப்தாருக்கு ஆதரவு தரும் தப்லீக் உறுப்பினர்கள் விதிவிலக்கு)

இப்தார் என்றால் நேன்பு திறத்தல் (நோன்பு திறக்க வைத்தல்)

''யார் ஒரு நோன்பாளியை நோன்பு திறக்க வைக்கின்றாரோ அவருக்கு நோன்பாளியின் கூலியைக் போன்று வழங்கப்படும் எனினும் நோன்பாளியின் கூலியிலிருந்து எதுவும் குறைத்துவிடமாட்டாது. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*ஷைத் இப்னு காலித் (ரழி)*
*நூல் திர்மிதி.*

நோன்பு திறக்க உதவுவது மகத்தான சுன்னத். இதை ரமழான் மாதத்தில் ஹயாத்தாக்குவது வஹ்ஹாபியத்தாம் இது மகா பிழையாம். நபிகளாரின் சுன்னத்தை ஹயாத்தாக்கும் இலக்கனம் இது தானா என சிந்தித்துப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆன் இத்தகைய மனநோய் உள்ளவர்களைக் கண்டிக்கிறது

''அவர்கள் எத்தகையோர் என்றால். இவ்வுலக வாழ்கையில் அவர்களின் முயற்சி பயனளித்து விட்டது நிச்சயமாக அவர்களோ காரியங்களில் அழகானவற்றையே தாங்கள் செய்வதாக எண்ணிக் கொள்கின்றனர்.'' (18:104)

தப்லீகின் பெரும்பாலான அடிமட்ட தீவிர உறுப்பினர்களிடம் இந்த எண்ணமே மேவி வருகிறது.

இப்தாரை குழப்புதல், அல்லது அதற்கெதிராக பிரச்சாரம் செய்தல், ஆதார பூர்வமான ஹதீதுகளை அமுல் படுத்துவோரை உதாரணமாக (அத்தஹியாத்தில் விரல் அசைத்தல், நெஞ்சின் மீது தக்பீர் கட்டுதல், தொப்பியணியாமல் தொழல், இஸ்லாமிய சஞ்சிகைகளை (த:லீம் தவிர்ந்த) படிப்போர், வெளியிடுவோர், ஐங்காலத் தொழுகையின் பின், இமாம் மௌமும்களை நோக்கி திரும்புதல், கூட்டு துஆ ஓதாமல் தனியே ஓதல், த:லீமில் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரிப்போர், மற்றும் குர்ஆன் தர்ஜ"மா வாசிப்போர், பித்அத், ஸிர்க்கை எதிர்ப்போர் ஆகிய பிரிவினரை இம்சைப்படுத்தி, ''வஹ்ஹாபி என பயமுறுத்தி, சமூகத்தில் பிரச்சாரமும் செய்து வருகிறார்கள்.

இதை ஒரு தீனுடைய அடிப்படை வேலை என்றும், நல்லகாரியம் எனவும் கருதியே செய்கின்றனர்.மேற்குறித்த சுன்னாவை செய்வோர்மீது தொடுக்கப்படும் மனிதாபிமானமற்ற தாக்குதல்,கூட, புனித ஜிஹாத்தாக சில தப்லீக் உறுப்பினர்களிடம் வேரூன்றி உள்ளது.

இது ஒரு பயனற்ற முயற்சி என குர்ஆன் கூறுகிறது (உன்மையை) அவர்கள் நிராகாரித்து, என்னுடைய வசனங்களையும், என்னுடைய துாதர்களையும் பரிகாசமாக எடுத்துக் கொண்டதன் காரணமாக அதுவே அவர்களின் கூலி நரகமாகும். (18:106)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961.11.05 கொள்ளுப்பிட்டி ஜும்ஆப்பள்ளிவாசலில், இடம் பெற்ற ஒரு விவாதத்தின் பின் (சூபி அப்துல்காதர் ஹசரத்துக்கும், தப்லீக் அமைப்பின் உறுப்பினர்களுக்குமிடையே நிகழ்ந்தது) முடிவில், பின்வரும் தீர்மானம் அங்கு கூடியிருந்த உலமாக்களால் நிறைவேற்றப்பட்டது.

◆ தப்லீக் ஜமாஅத் சுன்னத் வல்ஜமாஅத்தவர்கள்தான். அவர்கள் ஷாபி, ஹனபி, மாலிக் மதுஹபுகளையும் சார்ந்தவர்கள், (அதாவது சுத்தமான தக்லீது வாதிகள்).

◆ தப்லீக் ஜமாஅத்தினர் வஹ்ஹாபிய்யத் முதலான எந்தவொரு கொள்கையையும் ஆதரிக்கவோ, பிரச்சாரம் செய்யவோ இல்லை. (அப்படியென்றால் நபிவழிக்கெதிரான கூட்டம், நபிவழியை அங்கீகரிக்காத அதை செயற்படுத்த விழையாத பாமரத்தனமாக அமைப்பு சத்தியத்திற்கு எதிரானவர்கள்.)

வேதனையாதெனில் தப்லீக்கின் உலமாக்களும், பாமரர்களுடன் இணைந்து சத்தியத்தை மறைக்கும் சதிமுயற்சியில் ஈடுபட்டிருப்பதுதான். உலகாயத நோக்கங்களைத் துறந்து விட்டு நெஞ்சுறுதியுடன், உறுதியான நிலைப்பாட்டுடன் ஹக்கை ஏன் வெளிப்படுத்தாமல் மூடிமறைக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய அக்கிரமம், குர்ஆன் கூறுகிறது

''நீங்கள் உண்மையை பொய்யுடன் கலக்காதீர்கள். உண்மையை நீங்கள் நண்கறிந்து கொண்டே, அதை மறைக்கவும் செய்யாதீர்கள் 2:42

நேரான வழி இன்னதென்று தெரிந்து கொண்டு தூதருக்கும் அல்லாஹ்வுக்கும் மாறு செய்வது நரகத்திற்கு இட்டுச்செல்லும், செயலாகும். (4:115) என குர்ஆன் மேலும் எச்சரிக்கை செய்கிறது.

முடிவாக தப்லீக் இயக்கஉறுப்பினர்களிடம் பணிவாக வேண்டுவது த:லீமை ஆதாரபூர்வமாக திருத்தி எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்க உறுப்பினரிடையே விமர்சனங்களை, மாற்றுக் கருத்துக்களை ஜீரணிக்கும் மனப் பயிற்சியை நெறிப்படுத்துங்கள்.

தப்லீகின் அமைப்பில் ஆறு நம்பர் அவசியமென்றிருந்தாலும் அத்தோடு மாத்திரம் அறிவை மட்டுப்படுத்திக் கொள்ளாதீர்கள். உங்கள் ஹல்காக்களில்-புனிதக் குர்ஆன் விளக்க உறைகள், ஹதீஸ் கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகளை வாசிக்கச் செய்வதன் மூலம் குர்ஆன் ஹதீதை புரிந்து கொண்ட சமூக அமைப்பை கட்டியெழுப்புங்கள்,.

உங்களின் தவறுகளை சுட்டிக்காட்டி விமர்சிப்பவர்களை, அச்சுறுத்துவதை விடுத்து, அத்தவறுகளை இணங்கண்டு, தப்லீக்கை புணருத்தானம் செய்யுங்கள்.

கருத்தை கருத்தால் எதிர்க்க முனையுங்கள் இதுதான் இஸ்லாமிய ஜனநாயக பராம்பரியம்.

வெறும் உடையையும், சில உதிரி அமல்களையும் செய்வதன் மூலம் உங்களை நல்லவர் என எடை போட்டு, பிற சகோதர இயக்கங்களை இழி கண்கொண்டு நோக்காதீர்கள். தக்வா (இறையச்சம்) செயல்களில் அல்ல; உள்ளத்தில்தான். சத்தியத்தை துணிவுடன் எடுத்துரைக்கும் உலமாக்களை இழிவாகவும், தரக்குறைவாகவும் மதிக்காதீர்கள். அவர்களுக்கு அச்சுறுத்துவதையும், சேதம் விளைவிக்க முனைவதையும் தவிர்ந்து கொள்ளுங்கள்.

தீனுடைய வேலைகளில், சத்தியம் ஓங்க செயல்படும் சகோதர இயக்க செயற்பாடுகளை, காழ்ப்புணர்வுடன் நோக்கி, அவர்களை வன்முறையால் அடக்க நினைக்காதீர்கள். தீமையோ, நண்மையோ கூலி கொடுப்பது உங்கள் பொறுப்பல்ல; அது அல்லாஹ்வின் வேலை.

இந்நூல்-உங்களை தரம் தாழ்த்த எழுதப்பட்டது என நினைக்காதீர்கள். உங்கள் தவறுகளை உணர்த்த மேற்கொண்ட சிறு முயற்சி; நேர்வழிக்கு அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவூதி அரேபிய பத்வா சபைத் தலைமையகத்தின் "தப்லீக் ஜமாஅத்" பற்றிய பத்வா (தீர்ப்பு)

தாம் ஏற்றுள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதில் இந்த ஜமாஅத் அங்கத்தினர்கள் அதிகம் உற்சாகம் காட்டுகின்றனர். நற்குணமும் மக்களை மதிக்கும் மனப்பான்மையும், பிறரோடு இணக்கமாக நடந்து கொள்ளும் தன்மையும் இவர்களிடம் காணப்படுகிறது. தனி நபர், இயக்கங்கள், அரசியல் சார்ந்த விடயங்களோடு தம்மை சம்மதப்படுத்திக் கெதள்ளமாட்டார்கள். ''த.்.வா'' விடயத்தில் மேலோட்டமாகவே செயற்பட்டு வரும் இவர்கள் பிரச்சினைகள், எதிர்பார்ப்புகள், எவையேனும் நிகழ்ந்து விடக் கூடாது என்பதை தம்மை அண்டியுள்ளவர்களோடு இணங்கிச் செல்வதில் அளவு மீறி கொள்கின்றனர்.

இஸ்லாத்தின் அடிப்படை அம்சமான இறை ஏகத்துவம் (தவ்ஹீத், அகீதா) பற்றிய பேச்சுக்களில் மிகவும் அலட்சியமாக நடந்து கொள்ளும் அளவுக்கு, இவர்களின் இணங்கிச் செல்லும் தன்மை எல்லைமீறி விட்டது. நபிமார்களின் த.்.வாப் பணியின் மைல் கற்களாக (மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக) இவ்விறை ஏகத்துவம் கோட்பாடு இருந்து வந்தது. அதனை மக்கள் மத்தியில் பகிரங்கமாக எடுத்துறைத்தபோது., பலதரப்பட்ட எதிர்ப்புகளுக்கும் கடுஞ்சொற்களுக்கும் சிலவேளை பெரும் தாக்குதல்களுக்கும் ஆளாக வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால்தான் புனிததீனையும் அதனை ஏற்றோரையும் எதிரிகளிடமிருந்து பாதுகாத்து இறை வசனமொன்றை உயர்ந்தது என்பதை எடுத்துரைப்பதற்கான வழியாக ''ஜிஹாத்'' (புனிதயுத்தம் ) கடமையாக்கப்பட்டது. ஆனால் தப்லீக் ஜமாஅத்தில் அவர்கள் வகுத்துக் கொண்டுள்ள அடிப்படையில் உள்ளது போன்று வெறுமனே த.்.வாவிற்காக வெளிக்கிளம்புவது என்றவகையில் நபிமார்களின் பணி அமைந்திருக்கவில்லை. அவர்கள் பிறரோடு இணக்கமாக நடந்து கொள்ளும் அதே வேளை சந்தர்ப்பம் வாய்க்கும் போது உண்மையை பகிரங்கமாக எடுத்துரைக்கச் செய்தார்கள். அதனை (நாம் முன்வைப்பவற்றை) செயல்படுத்திக்காட்டுவதில் எந்த ஒரு சக்திக்கும் பயப்படவில்லை. அதன் விளைவாக தமக்கு இடையூறுகள், ஹிஜ்ரத் செய்யும் நிலை. சில வேளை கொலை போன்றன ஏற்பட்டாலும் பரவாயில்லை என்ற மனப்பான்மை அவர்களிடம் இருந்த்து.

இந்த வகையில் இவர்கள் (தப்லீக் அங்கத்தவர்கள்) ரசூல் மார்களின் த.்.வா அமைப்பு முறையை அடியொட்டிச் செல்வதாக (செயறப்பட்டு வருவதாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா அமைப்பு முறையை அடியொட்டிச் செல்வதாக (செயறப்பட்டு வருவதாக) எதுவும் அறியப்படவில்லை. இஸ்லாத்தின் அடிப்படை இறை ஏகத்துவ கோட்பாடோடு., மார்க்கத்தின் ஏனைய எல்லா அம்சங்களின்பாலும் இவர்களது த.்.வா அமையவில்லை. மாறாக, தனது இருப்பிடத்தை விட்டு வெறுமனே வெளியேறி, த.்.வாவை மேலோட்டமாக (குறுகிய அடிப்படையில்) மக்கள் முன் வைப்பதுதான் இவர்களது பணியாக இருந்து வருகிறது. இந்த் ஜமாஅத் அமைப்பு முறையில் ஈடுபடுபவர்களுக்கு, தாம் ஏற்றிருக்கும் கொள்கை பற்றியாவது சரியானதொரு விளக்கம் (ஆதாரபூர்வமான முறையில்) அளிக்கப்படுவதில்லை. இவ்வாறான காரணங்களினால், தப்லீக் இயக்கம் நபிகளாரின் சரியான த.்.வா வழி முறையை அடியொட்டி செயல்படுகின்றது எனக் கூற முடியாது.

பத்வா இல:1674

திகதி :1397.10.7 ஹிஜ்ரி

***தலைவர்***

அஷ்ஷெய்க்: அப்துல்லாஹ் பின் பாஸ் (மு.்.ப்தி)

***அங்கத்தவர்***

அஷ்ஷெய்க் :அப்துல்லாஹ் பின் கதயான் (மு.்.ப்தி)

***உப தலைவர்***

அஷ்ஷெய்க்: அப்துர் ரஸ்ஸாக் அபீபீ (மு.்.ப்தி)

***அங்கத்தவர்***

அஷ்ஷெய்க்: அப்துல்லாஹ் பின் குஊது (மு.்.ப்தி)

## தப்லீக் ஜமாஅத்திலுள்ள அடிப்படைக் குறைபாடுகளும், ஷரீஅத்தில் அது வகிக்கும் பங்கும்.

உண்மையைக் கொண்டு உபதேசம் செய்வது ஒவ்வொரு முஸ்லீமினதும் கடமை என்ற அடிப்படையில், எம் சமூகத்தில் இன்று மிகவும் பிரபல்யமான த.்.வா அமைப்புக்களில் ஒன்று என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "தப்லீக் ஜமாஅத்" என்ற அமைப்பின் அடிப்படைகளில் ஊடுருவியுள்ள பிழைகள் சிலவற்றை இங்கு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

பாவமான காரியங்களை முடிந்தளவு தவிர்த்து கடமைகளை தமக்குத் தெரிந்த முறையில் நிறைவேற்றி நற்குண நல்லொழுக்கங்களை அவ்வப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்யமானவர்கள். கீழ்ப்படிந்து செல்லல், பரஸ்பரம், நேசம் வைத்தல், முஸ்லீம்களை (தம் இயக்க சகோதரகளை) அனுசரித்து நடத்தல், கூட்டமைப்பு செயல்முறை, சகாக்களுக்கு பணிவிடை செய்தல், த.்.வாவின் போது நேரும் கஷ்டங்களை இன்முகத்தோடு சகித்துக்கொள்ளல் தாராளமனத்தோடு தமது த.்.வா வழியில் செலவு செய்தல், முஸ்லிம்களை அவர்களது இருப்பிடங்களுக்கே சென்று தரிசித்து நல்லவிடயங்களை எடுத்துக்கூறுதல் போன்ற அம்சங்களில் இதன் அங்கத்தவர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர்.

ஆனால் இந்த அமைப்பினர் இவ்வளவு இருந்துங்கூட நேரிய வழி எது என்பதைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டத் தவறி விட்டனர். குர்ஆன் ஹதீஸ் (நபிகளின் வழி முறை) உடன் இயைந்து செல்லாததொரு தனிவழி முறையை தமக்கென்று தம் சொந்த அபிப்ராயத்தின் பேரில் இவர்கள் வகுத்துக் கொண்டுள்ளார்கள். தான் செல்லும் வழியே சரியானது. அதனை விட்டு விலகி வேறொரு வழியில் (அமைப்பில்) த.்.வா செய்ய எவருக்கும் முடியாது, என அது கருத வருகின்றது. தூய முறையில் நல் உபதேசங்களை முன்வைத்து இவ்வமைப்பு முறையை நெறிப்படுத்த முயன்ற பெரும் உலமாக்களைக்கூட அது கவனத்திற் கொள்ளவில்லை.

## *இந்த அமைப்பிலுள்ள பிரதான குறைபாடுகள்*

1. த.்.வா வணக்க வழிபாடுகள், அகீதா (நம்பிக்கை) போன்ற யாவற்றிலும் சூபித்துவக் கொள்கையை (புதிதாக உருவாக்கப்பட்டது) அனுசரித்து நடத்தல்,

இவர்களிடம் (குறிப்பாக படிப்பறிவில்லாதவர்களிடம்) பித்அத், ஷிர்க், தாயத் கட்டுதல், போன்றன இருந்து வருகின்றது. மேலும் குர்ஆன் சுன்னா பற்றிய சரியான அறிவின்மையால் தம் தலைவர்கள் (அமீர்மார்) சொல்வதை அப்படியே செயல் படுத்துதல் மற்றும் ஆதாரமற்ற நூதனமான (பித்அத்) திக்ருகள், ஓதல்கள் (அவ்றாதுகளை) ஓதல். அகீதா (மார்க்க அடிப்படை பற்றிய நம்பிக்கை) பற்றிய விடயங்களில் மௌனம் சாதித்தல் போன்றன இதில் ஈடுபடுபவர்களிடம் சாதாரணமாகவே இருந்து வருகின்றன.

இவைபற்றிய அறிவின் அவசியம் பற்றி வற்புறுத்தி அதிகமான குர்ஆன் வசனங்கள் வந்துள்ளன, அஷ்ஷுரா-52, அல் அ.்.ராப் - 3, அந்நிஸா - 174,59,65. அல்-அஹ்ஸாப் -21, அந்-நூர் - 63.

2. குர்ஆன் சுன்னாவுக்கு மாற்றமான கொள்கை, கருத்துக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. குர்ஆன் சுன்னாவுக்கு மாற்றமான கொள்கை, கருத்துக்களைக் கொண்டு சூபித்துவ தரீகாக்கள் நான்கின் அடிப்படையில் பிரஸ்தாப ஜமாஅத் அமீர் (இன்ஆமுல்ஹஸான-ஹஜ்ரத்ஜீ) அவர்கள் தமது சீடர்களுக்கு (ஜமாஅத் அங்கத்தவர்கள்) பைஅத் செய்துள்ளார். அவை ஜிஸ்திய்யா, நக்ஸபந்திய்யா, காதிரிய்யா, சஹ்ரவர்திய்யா என்பவையாகும். அவர்களிடமிருந்து இவ்வாறு பைஅத் வாங்காவிடில் அவர்கள் வேறுகொள்கைகளை ஏற்று வழிகேட்டில் சென்றுவிடுவர் என ஹஜ்ரத் ஜீ (இதன் அமீர்) அவர்கள் போலிக் காரணம் கற்பிகின்றார்.

எமது வெற்றியும் உமது வெற்றியும் ரசூலுல்லாவின் நல்வழியை அணுவணுவாக பின்பற்றி ஒழுகுவதில்தான் தங்கியுள்ளது. என இவர்கள் கூறிக்கொண்டே சுன்னாவுக்கு மாற்றமான சூபித்துவ வழிகளில் அடிப்படையில் பைஅத் எப்படி வழங்க முடியும்?

நபிகளாரின் வழிமுறையை விளக்குவது குர்ஆனும் ஹதீஸ"ம்தான். நல்வழி நடந்த கலீபாக்களின் வழிமுறையும் இதில் இணைகின்றது. இதனோடு ஒத்து வராத யாவும் புதிதாக உருவாக்கப்பட்டவை என்றும் அத்தகையவை யாவும் பித்அத் ஆனவை என்றும். பித்அத் யாவும் வழிகேடிற்கு இட்டுச் செல்லக் கூடியவை என்றும் ஹதீஸ் குறிப்பிடுகினறது. (ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத்)

3. (அமல்களின் சிறப்புக்கள்) என்ற நூலையும் இன்னும் சில குறிப்பிட்ட நூல்களையுமே இவர்கள் ஏற்று, தினமும் அவற்றையே வாசித்து மனனமிடுமளவுக்கு நடந்து கொள்வதோடு தமது செயற்பாடுகளுக்குறிய உறுதியான ஆதாரங்களாகவும் அவற்றைக் கருதுகின்றனர். உண்மையில் இப்புத்தகங்களில் ஷிர்க் (இணை கற்பித்தல்) பித்அத், சூபித்துவக் கொள்கையின் சாயல்கள் மலிந்துள்ளன. ''ஹயாத்துஸ்ஸஹாபா'' என்ற புத்தகத்திலும் இத்தகைய ஆதாரமற்ற விடயங்களும், பலவீனமான ஹதீஸ்களும் ஊடுருவியுள்ளன.

4. இஸ்லாத்தில் நீங்கள் பூரணமாக நுழைந்து கொள்ளுங்கள் (பகரா-208) என்ற அல்-குர்ஆன் வசனத்தை சிறிதும் பொருட்படுத்தாமல் பூரண வாழ்க்கைத்திட்டமான நம் மார்க்கத்தை (இஸ்லாத்தை) குறிப்பிட்ட சில அம்சங்களில் சுருக்கி, அதுதான் ''தீன்'' (மார்க்கம்) என முன்வைக்கின்றனர். இஸ்லாமிய அகீதா. ஏகத்துவம் (தவ்ஹீத்) ஜிஹாத் போன்ற பல விடயங்கள் இங்கு விடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் அனைத்து அங்கங்களின்பாலும் அமைந்திருந்த நபிமார்களின் த'.வா வழிமுறைக்கும், இவர்களது மேலோட்டமான த'.வா அழைப்பிற்குமிடையில் பாரிய இடைவழி உள்ளது. அத்தோடு அதில் வெளிக்கிளம்பிச் செல்பவர்களுக்கே தீனைப்பற்றிய திருப்திகரமான தொரு விளக்கம் அளிக்கப்படுவதில்லை. எதிர்ப்புகள், பிரச்சினைகள் வருமென்ற பயத்தின் காரணமாக மக்களுடன் (அவர்களது கொள்கைகளோடு) அளவுக்கதிகமாக இணங்கிச் செல்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

5. ''அறிவின் பிறப்பிடமான உலமாக்கள் (மார்க்க அறிஞர்கள்) நபிமார்களின் வாரிசுகள்'' என்ற ஆதாரபூர்வமான நபி மொழியைக் கூட மறந்து தமது கொள்கையோடு ஒத்துவரும் உலமாக்களை மாத்திரம் மதித்து அவர்களை தம் தலை மேல் வைத்துப் போற்றுகின்றனர். தம் கொள்கையோடு உடன்பட்டு வராதவர்களை மதிப்பது மில்லை. ஏறெடுத்துக் கூட பார்ப்பதுமில்லை. அவர்கள் எத்தகைய அறிவுப் பொக்கிஷங்களாக இருப்பினும் சரியே!

6. எதன்பால் மக்களை அழைக்கும் பணியில் இவர்கள் ஈடுபடுகின்றனரோ அதுபற்றிய சரியான அறிவு அவர்களுக்கு இல்லை. ஒருவன் தன்னிடம் இல்லாத ஒன்றைப் பிறருக்கு எவ்வாறு வழங்க முடியும்? இத்தகைய இவர்கள் செயல் கீழ் வரும் குர்ஆன் வசனத்திற்கு நேர் முரணாக அமைந்துள்ளது.

இதுவே எனது (நேரிய) வழி. நான் (உங்களை) அல்லாஹ்வின் பாதையின் பக்கம் அழைக்கிறேன். தெளிவான ஆதாரத்தின் மீதே நானும். என்னைப் பின்தொடர்வோரும் இருந்து வருகிறோம் (யூஸுப்-108)

''அன்றிருந்த நபித் தோழர்கள் ( சஹாபாக்கள் ) மிகவும் நேரிய பாதையிலும் சிறந்த வழிமுறையிலும் இருந்த அதே வேளை, அறிவின் பிறப்பிடங்களாகவும், ஈமானின் பொக்கிஷங்களாகவும் மார்க்கத்தைப் பாதுகாக்கும் விடயத்தில் கைதேர்ந்த போர்வீரர்களாகவும் திகழ்ந்து வந்தனர். அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் (ரலி)

அல்லாஹ்விடமிருந்து அறிவை (மார்க்க ஞானத்தை) முழுமையாக திடீரெனக் கைப்பற்றி விடுவதில்லை. என்றும் அறிவில் தேர்ந்த உலமாக்களை (அறிஞர்களை)க் கைப்பற்றிவிடுவதினூடாகவே அறிவை எடுத்து விடுகிறேன். இத்தருணத்தில் புவியில் ஒரு ஆலிமும் (அறிஞனும்) எஞ்சியிருக்கமாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மக்கள் மார்க்க அறிவில்லாதவர்களைத் தம் தலைவர்களாக ஏற்று அறிவு. ஆராய்ச்சி (தக்க ஆதாரங்கள்) எதுவுமின்றி அவர்களால் வழங்கப்பட் பத்வாக்கள் (மார்க்க தீர்ப்புகள்) தம் தலைவர்கள் போன்று தாமும் வழிதவறி விடுகின்றனர். ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

7. மார்க்கத்தின் இருமாற்றுக் கண்களான அல்-குர்ஆன். அல் ஹதீஸ் பற்றிய சரியான அறிவு வழங்கப்பட்டதால், போலியான (இட்டுக்கட்டுப்பட்ட) ஹதீஸ்களையும், பலவீனமான ஹதீஸ்களையும் ஆதாரங்களாக இவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். சில நிபந்தனைகளின் அடிப்படையில் லஈபான (பலவீனமான) ஹதிஸ்களைக் கொண்டு அமல் செய்யலாம் என்ற சிலரின் கருத்தை வைத்து அந்த கருத்திற்காக தாம் முன்வைத்த அந்த நிபந்தனைகளையும் தூக்கியெறிந்து விட்டுப் பேசும் நிலையில் இந்த ஜமாஅத்தினர் இருக்கின்றனர்.

8. தமது ஜமாஅத் அமைப்புத்தான் உலகிலுள்ள ஒரே த∴வா அமைப்பு அதுதான் நேரான வழியில் உள்ள ஒரேஜமாஅத். என்ற நினைப்பில் இதன் அங்கத்தவர்கள் அதனுடனேயே எப்போதும் தம்மை இணைத்துக் கொளபவர்களாக உள்ளனர் அதனோடு இணைந்து செல்லாதவர்களை முற்று முழுதாகப் புறக்கணிக்கும் தன்மையும் இதன் அங்கத்தவர்களிடம் இருந்து வருகிறது.

அத்தோடு இந்த அமைப்பு மூலம் விடுக்கப்படும் த∴வாதான் சரியானது அதுதான் உண்மையானது. இது எதைப்பற்றி ஏவி, மக்களுக்கு உபதேசம் செய்கின்றதோ அதுதான் நபியவர்களின் சரியான வழிமுறை என்றெல்லாம் இவர்கள் பகற்கனவு காண்கிறனர். சிலவேளை தம் அமைப்பு மூலம் இவ்வாறு கூறப்படுபவை குர்ஆன். ஹதீஸ"க்கு மாற்றமாக இருப்பினும் சரியே! அவற்றை தலைமேல் வைத்து போற்றுகின்றனர்.

இந்த அமைப்பில் நல்லெண்ணதோடு நுழைந்து சில அறிஞர்கள் (காலப்போக்கில்) அதிலுள்ள அடிப்படைத் தவறுகளைச் சுட்டிக்காட்டி அதனை நல்வழிப்படுத்த யோசனை தெரிவித்தபோது, அதன் அங்கத்தவர்கள் அதுபற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல் தமது ஆரம்ப நிலையிலேயே பிடிவாதமாக இருந்ததை கண்டு. அந்த அமைப்பை விட்டு வெளியேறிவிட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

9. இந்த அமைப்பில் உள்ள முக்கியஸ்தர்கள் உட்பட ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. அரபு முஸ்லிங்கள் மத்தியில் செல்லும் போது ஆதாரபூர்வமான ஹதீஸ்களைக் கொண்ட நூலான ''ரியாலுஸ் ஸாலிஹீன்'' என்ற அரபுப் புத்தகத்தை வாசித்துக் காட்டும் அதே வேளை அரபியும் மார்க்க அறிவும் இல்லாத ஏனைய பாமர மக்களிடம் செல்கையில் ஆதாரமற்ற சம்பவங்கள் பலவீனமான ஹதீஸ்கள் மலிந்துள்ள தமிழ் நூற்களை முன்வைத்து அவர்களுக்கு அழைப்பு. விடுக்கின்றனர். இந்த செய்கை மூலம் இத்தகைய புத்தகங்களிலும் பிழைகளையும் தமது அமைப்பில் உள்ள அடிப்படைக் குறைகளையும் அரபு தெரிந்தவர்களுக்கு மறைத்து விடுகின்றனர். இதனால் அரபு தெரிந்தவர்கள் உண்மையில் இவ்அமைப்பு குர்ஆன் . ஹதீஸ் அடிப்படைப்படையில் செயற்பட்டு வரும் ஓர் இயக்கம் என எண்ணி அதில் அர்ப்பணித்தும் விடுகின்றனர் சிலகாலம் சென்ற பிறகுதான் அந்த அமைப்பின் சுய ரூபத்தை அறிந்து கொள்கின்றனர்

10 இந்த தப்லீக் ஜமாஅத் அமைப்பின் அங்கத்தவர்களுக்கு இந்தியாவிலுள்ள அதன் தலைமைப் பீடத்திலிருந்து எந்தக் கட்டளை வருகின்றதோ அதனை சிரமேற் கொண்டு நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவார்கள். அந்தக் கட்டளை நபிகளாரின் ஏவல் விலக்கல்களை ஒத்திருக்கின்றதா? அல்லது முரணாக இருக்கின்றதா? என சிறிது கூட அதுபற்றிச் சிந்தித்து பார்ப்பதில்லை.

இவை தவிர இன்னும் பல காரணங்களால் இந்த தப்லீ∴ ஜமாஅத் அமைப்பு முறை நபிமார்களின் த∴வா வழி முறைகளை அடியொட்டிச் செல்வதாகக் கூற முடியாது. சவூதி அரேபிய பத்வா சபைத் தலைமையகத்திலிருந்து ஹிஜ்ரி 1397 இந்த அமைப்பு முறை பற்றி வெளிவந்த பத்வாவும் (தீர்ப்பு) மேற் கூறிய கருத்துக்களை வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைநின்றவை


- அல்-குர்ஆன்.
- ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம்.
- வரலாறு படைத்த தப்லீக் ஜமாஅத்துடன் பதினைந்து ஆண்டுகள்.
- A.J.M. அஷ்ரப் புர்கானி(1979) பதிப்பு.
- இலங்கை தப்லீக் ஜமாஅத்தின் முன்னோடிகள்.
- A.J.M அஷ்ரப் புர்க்கானீ (1993) பதிப்பு.
- தப்லீக் எங்கு நோக்கிப் போகிறது. 97 வான்சுடர் கட்டுரைகள்.
- மழ்பூஜாத்.
- மௌலானா இல்யாஸ் (ரஹ்)பதிப்பு 1955.
- தப்லீக் தோன்றிய வரலாறு (குலாம் ரசூல்).
- முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப்.
- அஹ்மத் பின் ஹஜர் (1979).
- கவ்லுல் பலீ:. பித் தஹ்தீரி மின் ஜமாஅதித் தப்லி:. ஹமூத் இப்னு அப்துல்லாஹ் ஹமூது அத் தவ்ஜீரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் பிற நூல்கள்

**எரிநெருப்பிலிருந்து**
(கவிதைத் தொகுதி)

**தப்லீக் அன்றும் இன்றும்**
(விமர்சனம்)

**நினைந்தழுதல்**
(சிறுகதைத் தொகுதி)

ISBN: 955-96317-2-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org